REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னாகம் — விய — சித்திரை கரு, 28-4-'46 — ஞாயிறு | இதழ் 38

JAFFNA PUBLIC LIBRARY, MAY 20 1946, JAFFNA, CEYLON.

# வந்தது மலாயாக் கப்பல்!

## ஐக்கிய தேசியக்கட்சி உதயம்

[கொழும்புநிருபர் கடிதம்]

**நீலத்திரைக்கடலைக்கிழித்துக்கொண்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த "அருணடேல் காஸில்" என்ற கப்பலை இலங்கை மக்கள் குதூகலத்துடன் வரவேற்றனர். முன்னொருபோதும் இப்படியான ஜனத்திரள் கொழும்புத் துறைமுகத்திற் கூடவில்லை யென்றே குறிப்பிடவேண்டும். பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமா?**

ஜப்பானின் ஆட்சிக்குட்பட்டு மலாயாவிலே தவித்துக் கொண்டிருந்த இலங்கை மக்கள் சொந்த நாட்டு மண்ணிற் கால் வைக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். 1193பேரைச்சுமந்துவந்த அக்கப்பல் அநேக இலங்கை மக்களின் துன்பங்களை யெல்லாந் துடைத்திருக்கின்றது. சிறப்பாக யாழ்ப்பாணத்து மக்கள் அடைந்திருக்கும் இன்பம் சொல்லிலடங்காது. ஆகக்கூடி 100 சிங்களரே அக்கப்பலிற் காணப்பட்டனர். எஞ்சிய தொகையினர் அத்தனை பேரும் யாழ்ப்பாணத்துத் தமிழர்.

பினாங், கோலாலம்பூர், சிறம்பான், ரைப்பிங், ஈப்போ, ஜோகூர் முதலாம் இடங்களில் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்திருந்த அநேகர் இக் கப்பலில் வந்திருந்தனர். இவர்களில் அநேகர் பல வருடங்களாக மலாயாவிற் சேவை செய்தவர்கள். ஜப்பான் சிங்கப்பூரைக் கைப்பற்றியதும் இவர்களிற் பலர் தங்கியிருந்த இடத்தைவிட்டுப் பெண்டிர் பிள்ளைகளுடன் உள் நாடுகளுக்கு ஓட்டம் பிடித்தார்கள். கையில் அகப்பட்டதைச் சுமந்துகொண்டு காடுகளுக்குள்ளும் நுழைந்தனர்.

கடந்த மூன்றரை வருட காலமாக இவர்கள் பட்ட நிர்ப்பந்தங்களுக்கோ அளவில்லை. உண்ணப் போதிய உணவின்றி வாடினார்கள். பலர் உடுக்கத் துணியின்றித் தவித்தனர். தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை விற்றுக் கஷ்டகாலத்தை ஒருவாறு சமாளித்தனர். என்றோ ஒரு நாள் விமோசனங் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் தைரியத்தை இழக்காமற் சகல அக்கிரமங்களையும் அநுபவித்தனர். ஜப்பானியர் ஆட்சி சிங்கப்பூரில் நிலவிய காலத்தில் அவர்கள் ஆரம்பத்திலிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தொடர்ந்து வேலைக்கு அமர்த்தியது உண்மைதான். ஆனால் இளைப்பாறி உபகாரச் சம்பளம் பெற்றவர்களை யெல்லாம் கடைக்கண்ணாற்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

சிங்கப்பூரில் அமைதி நிலவியதும் மீண்டும் வீடு திரும்பியவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் கூடப் பறிபோய்விட்டதைக் கண்டார்கள். கொள்ளைக் கூட்டங்கள் ஒரு பொருளையும் விட்டுவைக்கவில்லை. இப்படி அந்தரமான நிலையிலிருந்த அநேகர் இன்று பிறந்த நாட்டை நினைத்துக்கொண்டு புறப்பட்டு வந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் இலங்காதேவி அன்புடன் வரவேற்கின்றாள். ஆதரவு அளிக்கின்றாள். இவர்களுக்கு இப்போது பணம் வேண்டியதில்லை. இலங்கை மக்களின் மனப்பூர்வமான அன்பும் அனுதாபமுமே அவசியமானவை.

சிங்கப்பூர்க் கப்பலின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு நின்ற ஜனக்கூட்டம் அன்று அமைதியை இழந்தது. உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மகாதேவா அவர்களும் தற்காலிக தொழில் மந்திரியும் சுங்க நிலையத்துக்குச்சென்று சகலவிதமான ஒழுங்குகளையும் மேற்பார்வையிட்டனர். கப்பல் வசதிகள் விரும்பத்தக்க முறையில் செய்யப்படவில்லை யென்பது அநேக பிரயாணிகளின் முறையீடு.

துறைமுகத்தைக் கடந்து அப்பாற் செல்லப் பிரயாணிகள் தவித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கென, அரசாங்கத்தால் உதவப்பட்ட 'கூப்பன்' புஸ்தகங்களைக்கூட அப்படியே வைத்துவிட்டு இனசனங்களையும் அன்பர்களையுந் தேடி ஓடினார்கள். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வசிப்பவர்கள் தத்தம் ஊர்போய்ச் சேருவதற்கு அரசாங்கம் விசேஷ பிரயாண வசதிகளை ஏற்படுத்தியது.

இலங்கைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து பயில்வதற்கென மலாயாவிலிருந்து பல மாணவர்கள் இப்பிரயாணிகளுடன் வந்திருக்கிறார்கள்.

### தொழிலாளர் தகராறு

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் உச்சநிலையை அடைந்துகொண்டேயிருக்கின்றது. தொழிலாளர் தங்கள் கோரிக்கைகள் நியாயத்தின்பாற் பட்டதென்று சொல்லி ஒற்றைக் காலில் நிற்கின்றனர். அவையனைத்தும் அசாத்தியமான கோரிக்கைகள் என்பது அரசாங்கத்தின் கட்சி. இருந்தும் வேலை நிறுத்தம் காட்டுத்தீ போல வேகமாகப் பரவி வருகின்றது. 2000 தொழிலாளர் வரை இதிற் பங்குபற்றியிருப்பதாகத் துறைமுகப் பகுதித்தலைவர் தெரிவிக்கின்றார். அப்படியல்ல. அது பச்சைப் பொய்; 6000 பேர் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் என்று துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவர் அரசாங்க அதிகாரியின் கூற்றை மறுத்துள்ளார்.

தொழிலாளரின் கோரிக்கைகள் நியாயமற்றவை யென்பதை எடுத்துக்காட்டும் சுவரொட்டிகள் திரும்புமிடமெங்குங் காணப்படுகின்றன. இதைப் பார்த்துவிட்டுத் துறைமுகத் தொழிலாளர்களும் சுவர் ஒட்டிகளைத் தாராளமாக உபயோகிக்கின்றனர். சுவர் ஒட்டிகளை ஒட்டும் விஷயத்தில் இரு கட்சியினரும் மோதிக்கொள்வதுடன் கைவரிசைகளையுங் காட்டிவிடுகின்றார்கள். ஈற்றில்விளம்பரங்கள் ஒட்டும்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர். அரசாங்கச் சுவர் ஒட்டியினருகே துறைமுகத் தொழிலாளரின் விளம்பரத்தாளும் ஒட்டப்படலாமென்பது இருசாராருக்கும் மகா திருப்தி! இவ்விதமான சமரச மனப்பான்மை ஏற்பட்டுத் தொழிலாளர் தகராறுகளையும் தீர்த்துவிட்டால் அது மிகவும் விரும்பத்தக்கதல்லவா? தொழிலாளர் எடுத்ததுக்கெல்லாம் வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை உபயோகித்துப் பொதுமக்களுக்குக் கஷ்டங்களை உண்டு பண்ணுவது முறையல்ல. பயனற்ற வேலை நிறுத்தங்கள் ஆவேஷத்தை மூட்டிச் சிக்கல்களை உண்டுபண்ணுமென்பதைத் தொழிலாளர்கள் உணர வேண்டும். அத்துடன் அரசாங்கம் தொழிலாளர் பயமுறுத்துவதற்குச் சந்தர்ப்பங் கொடாது அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்க வேண்டும்.

துறைமுகத்தில் வந்து நிற்கும் உணவுக் கப்பல்களிலுள்ள உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தொழிலாளர்கள் தயாராக விருக்கின்றனர். இச்செய்தியை ஸ்ரீ சேனநாயகாவுக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

### காலம் மாறப் போகின்றது

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து வேலையில்லாமல் வீட்டுக்குப் பாரமாக விருப்பது முடியாதாயிற்று. வாலிபர்கள் தொடக்கம் 'பென்ஷன்' பெற்ற வயோதிகர் ஈறாக ஏதோ ஒரு வேலையில் அமர்ந்து கைநிறையக் காசு அடித்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சௌகரியம் இப்போது கரைந்துகொண்டே வருகின்றது. இன்னும் மூன்று மாதத்துக்குள் வேலையில்லாத் திண்டாட்டம் மும்முரமாகலாமென ஸ்ரீ கொத்தலாவலா தெரிவிக்கின்றார். யுத்தப்பிற்காலப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பெற்ற மந்திரிக் குழுவின் உபசபை விடுத்திருக்கும் இடைக்கால அறிக்கையில் இவ்விபரங் காணப்படுகின்றது. இவ்வாண்டு ஒகஸ்ட் மாதத்துக்கும் 1946-ம் ஆண்டு செப்டம்பருக்குமிடையில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர் வேலையில்லாது கஷ்டப்படுவார்களென அவ்வறிக்கை எச்சரிக்கை செய்கின்றது! ஆகவே, இப்படியான வயிற்றெரிச்சல் நிகழாது தடுப்பதற்காக அரசாங்கம் இக்கணமே யுத்தப் பிற்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து முயற்சிக்கவேண்டுமெனக் குறித்த உபசபை கூறுகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் சமூகத்துக்குக் கேடு விளைத்து வாழ்க்கையிற் கசப்பை உண்டாக்குந் தன்மை வாய்ந்தது. ஆகவே இலங்கை அரசாங்கம் இது விஷயத்தில் ஆகவேண்டிய வழிவகைகளைக் கையாண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தலையெடுக்கவிடாது முளையிற் கிள்ளி எறிந்து விடுவது அத்தியாவசியமாகின்றது.

### புடவைக் கட்டுப்பாடு

அரசாங்கசபை மூச்சுவிடத் தொடங்கிவிட்டது. புடவைக் கட்டுப்பாடு சம்பந்தமாக நாட்டில் நிலவும் ஊழல்கள் ஒருபுறமிருக்க இப்போது இந்த நிர்வாக ஸ்தாபனத்தை மூடிவிடுவதற்கு யோசனைகள் கூறப்படுகின்றன. புடவைக்கட்டுப்பாட்டுப்பகுதியைமூடிவிடவேண்டுமென ஸ்ரீ அபயவிக்கிரமா ஓர் அவசரப் பிரேரணையை அரசாங்கசபையிற் கொண்டுவந்திருக்கின்றார். நாட்டு மக்கள் கூப்பன்களைக் கொடுத்துப் புடவைபெற இயலவில்லை யென்றும் [illegible] கூப்பன்கள் நாட்டில் [illegible] இன்றனவென்றும் தெரிவித்து, அவர் மீண்டும் பேசியதாவது:

"அநேக பொறுப்பற்ற வாலிபர்கள் புடவைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களாகச் சகல இடங்களிலுஞ் சுற்றித்திரிகின்றனர். இவர்களில் 90 சத விகிதமானோர் கைலஞ்சம் பெறுதலில் மகா கெட்டிக்காரர். இவர்களால் நாட்டுக்கு எவ்வித நன்மையுமில்லை. கட்டுப்பாட்டை நீக்குவதன் மூலம் புடவை விலையைக் குறையச் செய்யலாமெனத் தீர்க்கமாகக் கருதுகின்றேன்."

இப்பிரேரணையை ஆதரித்துப் பலர் பேசினார்கள். விவாதம் முற்றுப்பெறவில்லை.

### தோல்வி பெற்ற பிரேரணை

அரசாங்கசபையில் அங்கத்தினர் சிங்களத்திலுந் தமிழிலும் பேசலாமென நிரந்தர விதிச்சபை செய்துள்ள சிபார்சை யொட்டித் திருத்தஞ் செய்வதற்காக ஸ்ரீ ஜயவர்த்தன கொண்டுவந்த பிரேரணை தோல்வியுற்றது. நிரந்தரவிதியிலே திருத்தஞ் செய்ய வேண்டின் குறைந்தது 38 வாக்குகள் வேண்டும். ஸ்ரீ ஜயவர்த்தனவின் பிரேரணைக்குக் கிடைத்தவாக்குகள் 37. ஆகவே பிரேரணை தோல்வியுற்றது.

புதிய பார்லிமெண்டில் தாராளமாகத் தாய்மொழியில் வெளுத்து வாங்கலாம். ஆங்கிலமே பேசத் தெரியாதவர்களுக்குக் கூட இதில் இடமுண்டு. ஆகவே, அவசரப்படாமல் ஆறுதலாக விருக்கலாம்?

### சேனநாயகா கட்சி

புதிய அரசியலுக்குக் கட்சிகள் கண்டிப்பாக இருந்தே தீர வேண்டும். அங்குமிங்கும் ஓடித்திரியும் ஸ்ரீ சேனநாயகா புதியதோர் அரசியற் கட்சியை ஏற்படுத்திவிட்டார். ஐக்கிய தேசீயக் கட்சி என்று இதற்குப் பெயருஞ் சூட்டிவிட்டார்கள். இருபதுக்கு அதிகமான அரசாங்கசபை அங்கத்தினர் கூடி இப்படியான ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். இலங்கைத் தேசிய காங்கிரஸைச் சேர்ந்தவர்களும், சிங்கள மகா சபையின் சில அங்கத்தினரும் ஒரு சில தமிழர்களும் முஸ்லீம்களுமே இந்த இருபது பிரகஸ்பதிகளும். மீண்டும் ஓர்முறைகூடி ஆகவேண்டிய திட்டங்களை இவர்கள் சமைப்பார்கள். புதியதிட்டத்தின்படி 95 தொகுதிகள் ஏற்படும். இவ்வெல்லாம் இப் புதிய கட்சி நிர்வாகசபைகள் கூட்டிக் காரியத்தில் முன்னேற யோசிக்கின்றது. கட்சியின் கொள்கைகளுக்கு அமைந்து அங்கத்தினர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமும் வற்புறுத்தப்பட்டிருப்பதாக அறிகின்றேன். சிங்களமகாசபைத் தலைவருக்கு இந்த ஒழுங்கு பிடிக்கவில்லை. இதனாற் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீ. பண்டாரநாயகா புதிய கட்சியிற் சேர்ந்துகொள்வது அவருடைய சகாக்களுக்குப் பிடிக்கவில்லை. இப்படியெல்லாம் எதற்காக ஒருவரிடங் கட்டிக்கொடுக்கவேண்டுமென அவர்கள் கருதுகின்றனராம்.

ஏனைய கட்சிகளின் போக்குகளை அறிய முடியவில்லை. ஸ்ரீ பொன்னம்பலம் ஐக்கிய தேசீயக் கட்சியை ஆதரிப்பார் என்றகதையும் அடிபடுகின்றது. சிங்கள மகாசபையுடன் சேர்ந்து பிரத்தியேகமான ஒரு கட்சியை ஸ்ரீமான்கள் பொன்னம்பலமும் பண்டாரநாயகாவும் கூட்டப் போகின்றனர் என்றும் பலர் பேசிக்கொள்ளுகின்றனர். ஏதோ ஒன்று ஆகியே தீரவேண்டுமல்லவா?

## ஈழம் இழந்த கலைஞன்

### எஸ். மகாதேவா மறைவு

பகிரங்க வேலைப் பகுதித்தலைவரும் கட்டடக் கலை விற்பன்னருமான ஸ்ரீ. எஸ். மகாதேவா புதன்கிழமை பிற்பகல் இவ்வுலக வாழ்வைநீக்கிவிட்டார். ஈழகேசரி வாசகர்களுக்கு இது மிகுந்த விசனத்தைக் கொடுக்குமென்பதை யறிவேன். இலங்கை அரசாங்கப் பகுதியில் ஒரு பூஷணமாக விளங்கிய இத் தமிழ் மகனின் பெருமையே தனி. கடந்த சனிக்கிழமை யன்றுதான் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பினார். சிற்பசாஸ்திர விற்பன்னர் சிலரை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக இந்தியா சென்றிருந்தார். இறக்கும் பொழுது இவருக்கு வயது 53. ஆரம்பத்திற் கட்டிடங்களுக்குப் படம் போடும் ஒருவராகச் சேர்ந்தவர். இறக்கும்போது கௌரவமான தலைமைப் பதவியை வகித்தார். 37 வருடங்களாகச் சேவை செய்துள்ளார். மேற்றிசைநாடுகளுக்குச் சென்று ஒப்பற்ற பட்டங்களையும் பெற்றார். ஸ்ரீ. மகாதேவாவின் அகால மரணம் எங்களை யெல்லாந் திடுக்கிடச்செய்துவிட்டது.

# நேதாஜி போஸ் இறக்கவில்லை

## சீனத்திலா? ருஷியாவிலா?

நேதாஜி போஸ் உயிருடன் இருக்கின்றாரா? "ஆம்" என்கிறார் ஸ்ரீ உத்தம் சந்த். இவர் அப்கானிஸ்தானைச் சேர்ந்த பிஷர்வார் வியாபாரி. 1941-ல் ஜேர்மனிக்குட் புகுவதற்காக நேதாஜி போஸ் ஊமை வேடத்தில் இருந்தபோது இவர்தான் அவருக்குப் புகலிடம் அளித்தார். சமீபத்திற் சென்னைக்கு விஜயம் செய்த ஸ்ரீ உத்தம் சந்த் நேதாஜி போஸ் உயிருடன் இருப்பதாகத்தெரிவிக்கின்றார்.

"மாஸ்கோவிலோ அல்லது சீனாவிலோ நேதாஜி போஸ் இருக்கிறாரென்பதே எனது பலத்த நம்பிக்கை. அவர் இந்தியாவில் இருப்பதாகச் சமீபத்தில் சில பத்திரிகைகளில் வந்த செய்தி வெறுங் கட்டுக்கதைகளே.

நேதாஜி போஸ், இரண்டு நாடுகளிலேதான் தங்க முடியும். ரஷ்யா அல்லது சீனாவிலேதான் அவர் இருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் அவர் ரஷ்யாவிலேதான் இருப்பார் என்று நான் நம்புகிறேன். ருஷிய பிறவ்டா பத்திரிகை இவ்வளவுதூரம் நேதாஜி போஸைத் தாக்கி எழுதவேண்டிய காரணம் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. சர்வதேச நிலைமை குழப்பமாயிருந்த காலத்திற்கூட நேதாஜி போஸ் ரஷ்ய கொள்கை பற்றியோ ரஷ்ய பிரமுகர்களைப்பற்றியோ குறை கூறியது இடையாது. நேதாஜி போஸ் சம்பந்தமாக, அந்த ஒரு கட்டுரையில் கூறியதோடு விட்டுவிடாதபடி மேற்கொண்டும்தான் அதில் கூறியதை அநுசரித்து எழுதவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். நேதாஜிபோஸ் மறைந்த விஷயங்களைப்பற்றி நான் தொடர்ச்சியாக எழுதிவரும் கட்டுரைகள் ரஷ்யாவுக்குள்போகின்றனவோ என்னவோ தெரியாது, இவை ரஷ்யாவுக்குக் கிடைத்திருக்குமானால், ஒன்று; ரஷ்யா தனது பழைய இராஜதந்திரப் பேச்சுக்களை அலட்சியம் செய்வதாயிருக்கவேண்டும். அல்லது தான் முன்பு எழுதிய புகார்களைச்சாதிக்க அதுவிரும்பவில்லையென்று ஏற்படுகிறது.

"சுபாஷ் போஸ் ஒரு தியாக புருஷர். அவர் இதற்கென்றே பிறந்தவர். ஏதேனும் ஒருவகையில் தன்னைத்தியாகம் செய்துகொள்ள வேண்டியவர். ஆதலால் … … இவர் இப்போது அடைந்திருக்கும் தியாக நிலையில் எவ்வித ஆச்சரியமும் கிடையாது. அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்று சனங்களெல்லாரும் யூகிக்கும் நிலையில் இருப்பதே ஒரு தியாக நிலை. ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் அவர் சௌக்கியமாகப் பிழைத்திருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன். தனது தேசத்துக்குவர ஒரு சரியான சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்று ஸ்ரீ உத்தம் சந்த் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● உணவுப் பஞ்சம் உழுதால் மாத்திரமல்ல அழுதாலும் தீராதாம்.

☼ சிங்கப்பூரில் நடைபெற்ற உணவு மகாநாட்டுக்குச் சென்றிருந்தவர்களும் சுகமாகத் திரும்பிவந்து விட்டனராம்.

☼ சென்ற 2-வருடங்களாக அரிசி தந்துதவிய எகிப்து, பிறேசில் ஆகிய 2 தேசங்களிடமிருந்து தொடர்ந்து எதிர்பார்க்கஏலாதாம்.

☼ வரும் ஜூலாய் மாதம் வரைக்குந் தான் இவ்விரு தேசங்களிடமிருந்து உதவி பெற முடியுமாம்.

☼ பர்மா, சியம் ஆகிய இடங்களில் இருக்கும் மேலதிகமான அரிசியை வாங்குவது சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடந்ததாம்,

☼ அரிசிக்குப் பதிலாகத் தங்கப்பவுணைச் சியம் எதிர்பார்க்கின்றதாம்.

☼ எப்படியிருந்த போதிலும் 2-ந் தவணை அரிசிப்பங்கீட்டுக் காலம் முடியும் வரையும் காலந் தாழ்த்தப்படுமாம்.

☼ உணவு நெருக்கடி உலகம் முழுவதையும் பாதித்து வாட்டும் இக்காலத்தில் இவ்விஷயமாக ஒரு திருப்திகரமான முடிவு ஏற்படாதாம்.

● இங்கிலைமையில் தவங்கிடந்து கொண்டுவந்த அரிசியையும் இறக்கியடுக்க அரசாங்கம் இப்போது கஷ்டப்படுகிறதாம்.

☼ துறைமுகத் தொழிலாளிகள் பஞ்சப்படி முதலியன சம்பந்தமாக வேலை நிறுத்தம் ஆரம்பித்தார்களாம்.

☼ ஏற்ற தருணத்திற் காலம் அறிந்து நெருக்கடியை யுண்டாக்கிறைற்றன் எவரும் வழிக்கு வருவார்களாம்.

☼ இவ்விதமான ஓர் ஆயுதத்தைக் கொண்டே தொழிலாளிகளும், அரசாங்க ஊழியர்களும் இப்பொழுது தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆரம்பித்து விட்டனராம்.

☼ உலகெங்கும் ஒவ்வொரு துறையிலும் இம்மாதிரியான நெருக்கடி தொற்றுநோய் போற் பரவிவருகின்றதாம்.

☼ இதனற் கூடிய கஷ்டத்தையடைபவர்கள் ஏழைப்பொதுமக்கள் என்பதை எவராவது கருதுவதில்லையாம்.

● உணவுப் பஞ்சத்துடன் தொழிற் பஞ்சமும் விரைவாக முன்னேறி வருகின்றதாம்.

☼ இந்த வருடத்தில் 'செப்டெம்பர்' மாதம் முடிந்ததும் இரண்டு இலட்சம்பேர் வரையில் வேலையில்லாது திண்டாட நேரிடுமாம்.

☼ இது வரையில் 15,000 பேர்களுக்கு அரசாங்கம், பல வகையான புது அபிவிருத்தித் திட்டங்களில் வேலை கொடுத்திருக்கின்றதாம்,

☼ மிகுதியானவர்களுக்குக் கூடியவரையில் வேலை கொடுப்பதற்காகப் பல வகையான திட்டங்களை அரசாங்கம் வகுக்க முயற்சி செய்கின்றதாம்.

☼ இவர்களுள் விடுதலையடைந்த இராணுவவீரர்களுக்குத்தான் விசேஷ சலுகை காட்டப்படுமாம்.

☼ இம்மாதிரியான சலுகைகளாற் சில அரசாங்கப் பகுதிகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு அதிருப்தியுண்டாகின்றதாம்.

☼ இதன் பேருக எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்து விடவுங் கூடுமாம்.

☼ பொலீஸ்ப் பகுதியிலுள்ள கீழ்த்தர உத்தியோகத்தர்களிடையேயும் 'குசுகுசு'க் கூட்டங்கள் நடைபெறுகின்றனவாம்.

☼ இவர்கள் எல்லோருந் திரண்டு ஒரு சங்கமாகச் சேர்ந்து தங்கள் நலனைப் பாதுகாக்கின்றனராம்.

☼ பொலிஸ் விசாரணைக் 'கொமிஷன்' முன்பாகவும் இச்சங்கத்துப் பிரதிநிதி தோன்றிப் பல 'ருசிகர'மான செய்திகளை அம்பலப்படுத்தினூராம்.

☼ இதனல் இவர்களை இதுகாறும் அடக்கி, ஒடுக்கிக் குதிரை விட்டுக்கொண்டு வந்த சில அதிகாரிகளுக்குக் 'காய்ச்சல்' உண்டாகியிருக்கின்றதாம்.

# யுத்த அட்டூழியங்கள்

## இந்திய அரசியல் நிலை

### திருச்சி—ஸ்ரீ ரா கருத்துக்கள்

**ம**னிதனது ஏராளமான குறைகளின் சின்னங்களாக அவ்வப்போது உலகில் பூதாகார உருவெடுத்துத் தோன்றி, அட்டூழியஞ்செய்யும் மகா யுத்தங்கள் இரண்டை நாம் வெகு சமீப காலத்துக்குட் கண்டு விட்டோம். சின்னஞ் சிறு நாடுகளைப் பெரிய பெரிய வல்லரசுகள் போட்டி போட்டுக்கொண்டு கொள்ளையடித்துப் பாழாக்கி அதன் பலனைய்க் கொழுத்து வருவதே இந்த மகாயுத்தங்களின் அடிப்படைக் காரணமாகும். பெரிய வல்லரசாக ஒருநாடு இருந்தபோதிலும் அது மற்றொரு சிறிய நாட்டை அடிமைப்படுத்த முயற்சித்து எத்தனை வேலைகள் செய்தாலுங்கூட அச் சிறிய நாடு ஒன்றுபட்டு எழுந்துவிட்டால் அதை அடக்கி வைத்திருப்பது அசாத்தியம் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது.

சென்ற மகாயுத்தத்தில் என்ன நடந்தது? ஜெர்மனி உலக ஆதிக்கத்துக்கு ஆசைப்பட்டது, ஐரோப்பாவிலுள்ள அயல் நாடுகளில் மாத்திரமன்றி மற்றும் ஆசியாவிலுந் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்ட முயற்சித்தது.

ஜெர்மனியின் ஆதிக்கத்தை எல்லாநாடுகளும் வெறுத்தன. ஆகவே எல்லோரும் ஒன்றுபட்டு ஜெர்மனியைஎதிர்த்து நசுக்கினூர்கள். அதன் ஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டை போட்டார்கள்.

இதன் பலனுக எதாவது நலன் ஏற்பட்டதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். காரணம் என்ன! இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வல்லரசுகளெல்லாம் ஜனநாயகத்தைப்பற்றி அதிகமாகப் பேசிய போதிலும் நடைமுறையிலே தங்கள் ஆதிக்கத்தை மற்றைய நாடுகளிலிருந்து அகற்ற விரும்பவில்லை.

இந்தக் கேடான எண்ணங்களின் விளைவே இரண்டாவது மகாயுத்தமாகப் பரிணமித்தது. புதுவிதமான ஆகாயவிமானங்களில் ஆரம்பித்து உயிர் முளையையே பூண்டோடு வேரறுக்கும் அணுக்குண்டு வரையிலும் கண்டுபிடித்து ஒருவரை யொருவர் கொன்று குவித்தனர்.

இந்த மகாயுத்தத்தின் முடிவில் உலக மக்கள் இன்றும் ஒரு விஷயத்தைத் வெளிவாகஅறிந்து கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகமும், சுதந்திரமும் வார்த்தைகளில் மாத்திரம் இருந்தாற் போதாது, செயலில் இருக்கவேண்டும் என்பதே அது. இதற்காகத்தான் அமெரிக்காவிலும், லண்டனிலும் பெரியபெரியமகாநாடுகள் கூட்டுகிறார்கள்; பேசுகிறார்கள். இந்த மண்ணுலகம் வெகு விரைவிலேயே ஒரு பொன்னுலகமாக மாறி விடுமா என்பது ஒருபுறமிருக்கட்டும். ஒன்று மாத்திரம் நிச்சயம். எந்த நாடும் அடிமை வாழ்வு வாழ இஷ்டப்படவில்லை; அது மாத்திரமல்ல — அடிமைப் படுத்துவோரை விரட்டியடித்துச் சுதந்திரம்பெறத் திண்ணமாக முனைந்து விட்டார்கள்.

பாரசீகம், எகிப்து, இந்தோனேஷியா முதலிய நாடுகளில் நடந்து வரும் வீரப் போராட்டங்கள் இந்த உண்மையைத் தெளிவாக நிரூபிக்கிறது.

அடிமைவாழ்வின் காரணத்தால் சுதந்திர தாகமும் ஏற்படுகின்றது. ஐயர்லாந்தின் சுதந்திரப் போராட்டம், ஜர்மனியின் சுதந்திரப் போராட்டம், அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டம் என்றெல்லாம் படித்துள்ளோம். இந்த அமெரிக்கக்காரர்கள் இருக்கிறார்களே அவர்கள் மிகவுங் கர்வமுள்ள மனிதர்கள். உலகத்தின் பெரிய சுதந்திரப் போராட்டம் அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம்தான் என்று கூறுகிறார்கள். இதைநாம்ஒப்புக்கொள்ளமுடியாது. என்? இந்தியாவின் போராட்டம் இதையெல்லாந் தூக்கியடிப்பதாக இருக்கிறது. நாம் புதிய முறைகளைக் கையாண்டு பல ஆண்டுகளாகக் கடுமையாகப் போராடி வருகிறோம். கத்தி, துப்பாக்கி, கப்பல், ஆகாயக்கப்பல், விஷமருந்து, அணுக்குண்டு எதாவது உண்டா? கிடையாது. அஹிம்சைதான் நம்முடைய ஆயுதம்.

விஷவாயுவை யாரோ ஒரு பிரகஸ்பதி கண்டு பிடித்தான். அதற்கு எதிராக முகமூடியை இன்னொரு பிரகஸ்பதி கண்டு பிடித்தான். எதிரியைத் தொலைக்க இன்னும் பெரிய விஷகுலத்தையும் கண்டு பிடித்தான். இப்போது அணுக்குண்டுவந்துவிட்டது. இதைவிடக் கடுமையாக எதாவது தோன்றலாம்.

இவை எல்லாம் எப்படி வந்தன. மஹாத்மா காந்தியடிகள் அஹிம்சையின் உயர்வை எப்படிக் கண்டார்? என்று கேள்விகள் எழலாம்.

சிறிது சிந்தனை செய்து பார்த்தால் மனிதன் இவ்வளவு கேடடைந்து கிடக்கும் காரணம் அவன் உபயோகித்து, வளர்த்து வரும் யந்திர சக்தியேயாகும். வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளையுங்கூட மனிதன் யந்திரங்களின் உதவியாற் பூர்த்தி செய்ய ஆரம்பித்துப் பல காலமாகிவிட்டது. யந்திரத்தின் பிசாசுச் சக்தி அவனுக்குக்கொஞ்சக்காலம் விளங்கவில்லை. தன்னுடைய தேவைகளை உற்பத்தி செய்வதற்கென்று சிருஷ்டிக்கப்பட்ட யந்திரம், தேவைகளையும் மீறி ஏராளமாக உற்பத்தி செய்து விட்டதைச் சிறிது காலத்தில் உணர்ந்தான். உற்பத்தி செய்த பொருள்களைக் கட்டாயம் விற்றுகவேண்டும்! இதனல் நாடு பிடிக்க வேண்டிய அவசியம் எற்படுகிறது.

கடலடியிலும், ஆகாயத்துக்கு அப்பாலும் கருவிகளின் மூலம் மனிதர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவர் உறுமுகிறார்கள். துப்பாக்கிப்பலம் அதிகமாக உள்ளவன் இந்த "ஜனநாயக" யுத்தங்களில் வென்று விடுகிறான்.

யுத்தம் முடிந்து விட்டது. யுத்தத்தின் கொடுமைகள் ஒரு அளவாவது உணர்ந்து சிந்தனை செய்ய அவகாசம் எற்படுகிறது. சமாதான மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. அகில உலக நல்லுணர்வுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. எல்லாக் கஷ்டங்களையும் நிவர்த்திசெய்து விட்டதாக நினைத்துக் கொண்டு எல்லோரும் வீட்டுக்குச் செல்கிறார்கள். ஆனல் அங்கே ஒரே பாழ்வெளியாக இருக்கிறது. பாலைவனமாக இருக்கிறது. இரத்தக்கறை தோய்ந்து காய்ந்து கிடக்கிறது. பிணங்கள் எங்கு பார்த்தாலும் குவிந்து கிடக்கின்றன. யுத்த உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்கள், தினசரி இன்றியமையாத தேவைகளைக் கூட யுத்தகாலத்தில் மறந்து விட்டதனல் தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

வாழ்க்கையைச் சீராக்கவேண்டும், புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. அதற்கான வேலைகள் ஆரம்பிக்கின்றன. இச் சமயத்தில் சில கொடுமைகள் ஏற்படுகின்றன. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அவ்வளவு பேரும் வேலையில்லாத நிலைக்கு வந்து விடுகிறார்கள். இதை நீக்கவும், புனருத்தாரணத்தை அரிதப்படுத்தவும் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன.

[illegible] இனி என்ன?

திரும்பவும் ஆரம்பத்துக்கே வர வேண்டியதாக இருக்கிறது. தேவைக்கதிகமான உற்பத்தி செய்து விடுகிறோம். மறுபடியும் "மார்க்கெட்" தொல்லை. நாடு பிடித்தல். அதற்காக யுத்தம். பின் சமாதானம் — புனருத்தாரணம்.

இத்தனைக்கும் அடிப்படையான காரணம் யந்திரம். இந்த உண்மையை மகாத்மா பல வருடங்களுக்கு முன்னரே கண்டு விட்டார். யந்திரம் வேண்டாம், சிறு கைத்தொழில்களே போதும் என்றார்.

இதுதான் மகாத்மாவின் 'அஹிம்சை'த் தத்துவம். எதிரே வரும் கட்டெறும்பையோ, தேளையோ கொல்லாமல் இருப்பதோடு அஹிம்சை முடிந்துவிட்டதா என்ற சந்தேகம் உண்டாகலாம். ஆனல் அஹிம்சையின் பொருள் அதோடு நின்றுவிடவில்லை. ஹிம்சையின் அடிப்படைக் காரணத்தையே ஒழித்துவிட்டது.

ஆகவேதான் நாம் சிறிது சிறிதாக முன்னேறிச் சுதந்திர வாயிலில் வந்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் யந்திரங்களைக் கையாண்டிருந்தால் நம்மோடு சமரசம் பேச யாரும் தயாராக இருக்க மாட்டார்கள். நம் தலையில் இரண்டு அணுக்குண்டுகளைப் போட்டு அடக்கி விடுவார்கள். இந்தோனேஷியாவில் என்ன நடந்தது. ஜனங்களெல்லாம் புரட்சி செய்தார்கள். ஆயுதங்கள் தாங்கி எதிரியைத் தாக்கினூர்கள். இதன் பயனுக என்ன நேர்ந்தது? எதிரியும் ஆயுதங்களைக் கொண்டு புரட்சியை அடக்க ஆரம்பித்துவிட்டான்.

நமது ஒப்பற்ற மகாத்மா 'அஹிம்சை'யைத் தம் வாழ்க்கையின் மூலாதாரமாகக் கொண்டார். பயத்தினுல் அவர் அஹிம்சையைக் கைக்கொள்ளவில்லை. துப்பாக்கி சுடக் கற்றுக்கொண்டால் நம்மைவிட அவருக்கு நன்றாக சுடத் தெரிந்துபோகும். அணுக்குண்டைக் குறி வைத்துப் போட அவருக்குத் தைரியம் உண்டு. இதெல்லாம் தீமை என்று அவருக்கு விளங்கிவிட்டதனல் அஹிம்சைப் பாதையில் செல்லுகிறார்.

சுமார் முக்கால் நூற்றுண்டாக இந்தியா சுதந்திரம் பெறப் போராடி வருகின்றது. அதன் பலனுக முன்னேறியிருக்கிறது. மாகாண சுயாட்சியில் ஆரம்பித்து, 'டொமினியன்' அந்தஸ்துப் பேச்சைக் கடந்து சுதந்திரத்தையே பெறப் போகும் நிலையில் நிற்கின்றது இந்தியா.

சுதந்திரம் அடைய 'இந்தியா ஹிம்சை வழிகளில் ஈடுபட்டிருந்தால் எப்போதும் ஆரம்ப நிலையிலேயேதான் இருந்திருக்கும்.

நம்மை ஆளும் அதிகார வர்க்கம் உலகின்கண் அவமானம் அடையும்படியாக நாம் செய்து விட்டோம். இந்தியாவைக் கட்டியாளுவதும், கொள்ளையடிப்பதும் இனி ஒரு கணமும் நடக்காது என்பதை உணர்ந்திருக்கிறான் மேற்கத்தியான். சுதந்திரத்தைத் தான் கொடுக்காவிட்டால் இந்தியர்கள் தாங்களே எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத்தெரிந்துகொண்டான்.

ஆகவே இப்போது சமாதானப் பேச்சுகள் நடைபெறுகின்றன.

இந்திய நிலை இப்போது எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம். லண்டனிலிருந்து மூன்று தூதர்கள் இங்கே பறந்து வந்திருக்கிறார்கள். இந்தியத் தலைவர்களைக் கண்டு பேசுகிறார்கள். யோசனை செய்கிறார்கள்—எழுதுகிறார்கள்—திட்டங்கள் போடுகிறார்கள்.

சுதந்திரங் கொடுப்பதென்று தான் தீர்மானம் செய்துவிட்டார்களே? சுதந்திரத்தைக் கொடுப்பதற்கு ஏன் இவ்வளவு தாமதம்? பேசாமல் இந்தியாவை விட்டு வெளியே சென்றுவிடலாமே என்று நேயர்கள் கேட்கலாம்.

திடீரென்று இப்படிச் செய்வது அவர்களுக்கும் நலமல்ல, நமக்கும் நலமல்ல. நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு திட்டத்தை ஸ்தாபித்துவிட்டுச் செல்வதுதான் உகந்தது.

எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய திட்டம் என்றால் என்ன? நாம் பற்பல அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறோமா? நமக்குள் பேதங்கள் இருக்கின்றனவா?

ஆமாம்; அவைதானே நம்மை இத்தனை காலம் அவஸ்தைப் படுத்தி வந்திருக்கின்றன.

ஆகவே சுதந்திரம் அளிப்பதாகச் சொல்லிக்கொண்டு மூன்று பேர் புது டில்லிக்கு வந்திருந்துங் கூட காலமுழுவதும் ஓயாத பேச்சிலும், திட்டத்திலும் கழிக்கப்படுகிறது.

தகராறு முக்கியமாக ஜின்னுவுக்கும் நமக்குமிடையே இருக்கிறது. என்ன சொல்லுகிறார்? நான் தான் இந்திய முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி என்று சொல்லுகிறார். இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களிடம் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டதாகவும், இப்போது அவர்களுக்கு விடுதலை வேண்டுமென்றும், பாகிஸ்தான் என்று தனி ராஜ்ஜியம் வேண்டுமென்றுங் கூறுகிறார்.

பாகிஸ்தான் இந்தியாவுக்குத் தீமை விளைவித்துவிடும், அதில் ஏராளமான குறைகள் இருக்கின்றன என்பது காங்கிரஸ் கட்சி.

ஜின்னு இப்போது முட்டுக்கட்டையாகத் தோன்றுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

(1) வெள்ளைக்காரர்களின் கைக் கருவியாக மாறிவிட்டார் ஜின்னு.

(2) இதைத்தவிர அவருக்குச் சொந்தமாகவே இந்துக்களிடம் அவநம்பிக்கையும், பயமும் ஏற்பட்டிருக்கிறது.

இது மிகவும் கொடுமைதான். இந்தக் கொடுமையை எப்படி அகற்றுவது என்பது தான் பெரிய பிரச்னையாக இருக்கிறது.

இதற்காகவே மகாத்மா காந்தி, ஆஸாத், முதலிய நம் தலைவர்கள் ஆலோசனைகள் செய்து சில முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். ஜின்னு சாகிப்பின் பயத்தை நீக்க முயன்று வருகிறார்கள். நாம் வெகு சீக்கிரத்தில் சுதந்திரமடைந்துவிடுவோமா என்று தீர்மானமாக சொல்லிவிட முடியாது. ஆனல் நம்மை இனி சாக்குப் போக்குச் சொல்லி ஏமாற்றுவதென்பது முடியாத காரியம்.

தூதுக்கோஷ்டியினர் இந்தியாவுக்கு வந்த புதிதில் இருந்த வேகம் இப்போது இல்லை. எல்லா விஷயங்களையும் காலந்தான் தெளிவுபடுத்த முடியும். தேர்தல்கள் முடிந்துவிட்டன, காங்கிரஸ் மகாசபை அமோகமாக வெற்றி பெற்றுப் பலஇடங்களில் மாகாண மந்திரிசபைகளை அமைத்துவிட்டது. நாட்டில் நடமாடிவரும் சோற்றுப் பஞ்சமும், துணிப்பஞ்சமும் மக்களின் அரசாங்கத்தால் சீக்கிரம் அகற்றப்படும் என்பது திண்ணம்.

இந்தப் பெரிய தருணத்தில் தான் விரும்பத்தகாத ரகளை தமிழ் நாட்டில் நடந்துவருகிறது. ஒரு காலத்தில் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கெல்லாம் லட்சியமாக இருந்துவந்த சென்னை மாகாணம் இப்போது எல்லோருடைய கேலிக்கும் பாத்திரமாயிருக்கிறது. ராஜாஜி ஒரு பெரிய பிரச்னையாகப் போய்விட்டார். அவருடைய திறனையும், இப்போது ஏற்பட்டிருக்கும் தேவையையும் உத்தேசித்து நமது தலைவர்கள் ராஜாஜியைப் பிரதமராக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நமக்கு ராஜாஜியைப் போன்ற தலைவர் ஒருவர் இத்தருணத்தில் தேவை என்பது உண்மைதான்.

ஆனல் ராஜாஜி எதிர்ப்பு கோஷ்டி நீண்டகாலமாக ஒளித்து வைத்திருந்த கசப்பை இப்போது வெளிப்படுத்திவருகிறது. ராஜாஜியின் ஏகாதிபத்தியம் வேண்டாம் என்றெல்லாம் சொல்லிவிட்டது. ராஜாஜி கூடாது என்று சமீபத்தில் கட்சிக்கூட்டத்தில் தீர்மானம்கூட நிறைவேறிவிட்டது.

இது விரும்பத்தக்க விஷயமல்ல. தேசத்துக்குக் கேடுவிளைக்கும் அளவுக்கு ஒரு தனி மனி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

# இராம இராச்சியம்

இவ்வாரம் "இராம இராச்சியத்"தின் தொடர்பாக அமைந்துள்ள அமைச்சரும் பெற்றோரும் என்ற பகுதிகள் இங்கு தரப்பட்டிருக்கின்றன.

## அமைச்சர்

ராய. சொக்கலிங்கன்

இராம ராஜ்யத்தில் அமைச்சர் நிலையென்ன என்பது இங்கு நான் ஆராயவேண்டுவது. ஆனல் இராமருடைய அரசியலின் அமைச்சர் நிலையைப்பற்றி ஆராயவேண்டிய அவசியத்தைக் கவிச்சக்கரவர்த்தி உண்டாக்கவில்லை. இராமனுடைய அரசாட்சியைப் பற்றியோ அவனுடைய அமைச்சரைப் பற்றியோ கம்பர் வகுத்துக் கூறவில்லை.

தடைப்பட்ட மணிமுடி பதினன்கு ஆண்டுகள் கழித்து இராமனுடைய தலையில் ஏறும் பெருமை பெற்றது. திருமுடி சூடிய பின்னர் துணைவர்கட்கெல்லாம் விடை கொடுத்தனுப்புகிருன் இராமன்.

உம்பரோடு இம்பர் காறும்
உலகமோர் ஏழும் ஏழும்
எம்பெருமானென் றேத்தி
இறைஞ்சி நின்று ஏவல் செய்யத்
தம்பியரோடும் தானும்
தருமமும் தரணிகாத்தான்
அம்பரத்து அனந்தர் நீங்கி
அயோத்தி வந்திருந்த காலை

என்ற சிறந்த கடைசிப் பாட்டோடு கம்பர் இராமாயணத்தை முடிக்கின்ருர்.

ராம ராஜ்யத்தின் அமைச்சரைப் பற்றிக் கம்பர் ஒன்றும் சொல்லவில்லை. அதனுல் என்ன? தசரத ராஜ்யத்தின் அமைச்சரைப்பற்றிக் கம்பர் சொல்லியிருக்கிருர். இராமனை மகனகப்பெற்ற பெருமை வாய்ந்த தசரதன் சீரிய செங்கோல் செலுத்தினன், தசரத ராஜ்யத்திலிருந்த தலையமைச்சன் சுமந்திரனே இராம ராஜ்யத்திலும் தொடர்கின்ருன். எனவே தந்தையாட்சியில் நடந்த அமைச்சியலை மைந்தனுட்சிக்கும் இங்கு கொள்வதில் தவறில்லை.

அமைச்சர் எப்படியிருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் இலக்கணம் வகுத்தார். அந்த இலக்கணங்கட்குப் பொருந்தவே அமைச்சர் இருந்ததாகக் கம்பர் சாற்றுகின்ருர். கம்பருடைய இராஜ்யத்தில் மந்திரிமார் எப்படியிருந்தனர்?

நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவன் இயல்பின்
எண்ணுவார்

ஒவ்வொரு பொருளிலும் உள்ள நன்மை தீமைகளை ஆராய்வார். நோய் போக்க வைத்தியர் உதவுவதுபோல மன்னனுக்கு வேண்டுவன செய்வார். கசப்பு மருந்தைக் கொடுக்கவோ, அவசியமாயின் மன்னவன் புண்ணை வாளாலறுத்துச் சுடவோ அஞ்சமாட்டார்அமைச்சர். மேலும கம்பர் கூறும் மந்திரிகள்,

உற்றது கொண்டு மேல்வந்து
உறு பொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்த
தாயினும் மாற்றல் ஆற்றம்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப்
பெரியவர் அறிய நூலும்
கற்றவர் மானம் நோக்கின்
கவரிமா அனைய நீரார்

மந்திரிகள் மன்னனுடைய பொக்கிஷத்தில் பொருளை நிரப்பவேண்டும். அப்பொழுதுதான் திட்டங்களைப் பெரிதாக வகுத்து நாட்டிற்கு நலஞ்செய்ய முடியும். வரும பொருளை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு மேலும் எந்த நல்வழியில் பொருள் திரட்டலாம் என்று நினைக்கும் கொள்கையை உடையவராதல் வேண்டும்.

உற்றது கொண்டு மேல் வந்து
உறுபொருள் உணரும் கோளார்

விதியைக்கூட மாற்றியமைக்கும் ஆற்றல் உடையாரே அமைச்சராகத் தக்கவர். அவ்வளவு பெரும் முயற்சி வேண்டும். உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் ஊழையும் உப்பக்கம் காண்பரன்றே?

மற்றது வினையின் வந்த
தாயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர்

நல்ல குடியிலே பிறந்த மேன்மை வாய்ந்த பெரியவராக இருத்தல் வேண்டும மந்திரிகள்.

பிறப்பின் மேன்மைப் பெரியவர்

இன்னும என்ன குணம்வேண்டும் அமைச்சராவார்க்கு? நுண்ணிய நூல் பல கற்றறிதல் வேண்டும் அன்ருே. நூலறிவின்றேல் முன்ளுேர் செலுத்திய அரசியல் அமைச்சியல் முறையைத் தெரிந்து தக்கன கொள்ளல் இயலாமற் போய்விடும்.

மதி நுட்பம் நூலோடுடையார்க்கு
அதிநுட்பம்
யாவுள முன்னிற்பவை

என்பது பொய்யாமொழி. ஆதல்பற்றியே,

அரிய நூலும் கற்றவர்

அமைச்சர் என்று புகழ்கின்ருர் கம்பர்,

மானம் நோக்கின்
கவரிமா அனைய நீரார்

கவரிமா என்ற விலங்கையொத்தவர் அமைச்சர் மானம் என்ற பொருளில், கவரிமாவின் இயற்கை என்ன? ஒரு மயிர் உதிருமானுல் அது உயிரையே விட்டு விடும் என்று உரைக்கின்ருர் வள்ளுவனுர். மானத்திற்கு ஊறுவருமானுல் உயிரையே நீத்துவிடுவர் உயர்ந்தோர்.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா
அன்னர்
உயிர் நீப்பர் மானம் வரின்
மானம் படவரின் வாழாமை முன்
னினிது

இதினின்றும் கம்பருடைய அமைச்சர் மந்திரத் தொழிலில் மட்டும் வல்லவராக இருக்கவில்லை. மானத்திலும் சிறந்து விளங்குகிருர் என்று காண்கின்ருேம்.

மேலும் நல்லமைச்சர்
"தம்முயிர்க்கு உறுதி யெண்ணுர்"

தங்கட்கு உண்டாகும் பயனை அதாவது தம்சொந்த நலனை நினைத்து எந்தக் காரியமும் செய்யமாட்டார். சில சமயம் அரசன் கோபித்துக் கொள்வான். அறியாமையால் மந்திரியின் சொல்லை மன்னன் தவருக உணர்வான்.

"தலைமகன் வெகுண்ட போதும்"

அப்படி மன்னன் சினந்தாலும் அதற்குப் பயந்து தாம் கொண்ட நீதிக்கொள்கையை விட்டுவிடக்கூடாது மந்திரிகள். வேந்தனிடத்துப் பகையை பாராட்டவும் கூடாது.

"வெம்மையைத் தாங்கி"

மன்னவன் கோபத்தைப் பொறுத்துக்கொண்டு

நீதிவிடாது நின்று உரைக்கு வீரர்

நீதியை விடாமல் ஒரு தலையாகச் சொல்லிக்கொண்டேயிருக்கவேண்டும். அதுவே வீரமும்கூட. அப்படிச் செய்வோரே வீரர் என்று விளம்புகின்ருர் கவிஞர் பெருமான். வில்லெடுத்தோ கத்தி பிடித்தோ போர்க்களத்தில் இறங்குபவனே வீரன் என்று கருத வேண்டாம். வேந்தன் வெம்மையைத்தாங்கி நீதியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு நிற்பதற்கு வீரம் இன்றியமையாதது. அறவோர்க்குப் பெருவீரம் இவ்வீரமே. அமைச்சருக்கு விரும்பத்தக்க வீரம் இதுவே. இவ்வீரம் வாய்ந்த மந்திரியைப் பெற்ற அரசனை யாரும் எதுவும் செய்ய முடியாது.

இடிக்கும் துணையாரை யாள்
வாரை யாரே
கெடுக்கும் தகைமையவர்
தக்கார் இனத்தனுய்த் தானெழுக
வல்லானைச்
செற்ருர் செயக்கிடந்த தில்

இன்னும் கம்பர் அமைச்சர்க்கு என்ன குணம் கொடுக்கிருர் என்று பார்க்கலாம்.

"செம்மையில் திறம்பல்
செல்லாத் தேற்றத்தார்"

நல்ல காரியத்தில் மாறுபடாத தெளிவை யுடையவர்கள். ஒன்றை நல்லதென எண்ணியே துணிவார்கள். அந்தச் செம்மையான [illegible]னின்றும் திரும்ப ஒரு நாளும் மாறுபடமாட்டார்கள். நன்மை கடைப்பிடிப்பதில் அவ்வளவு பிடிவாதக்காரர்கள்.

"தெரியுங்காலம் மும்மையும்
உணர வல்லார்"

முக்காலமும் அறியும் ஆற்றல் வல்லவர்கள். எப்படிச் செய்தால் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பது அவர்கட்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெருந்திறமை கம்பருடைய அமைச்சர்க்கு உண்டு. அதுதான் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவது. எதையும் வளவளா என்று பேசமாட்டார்.

மன்னன் ஒரு குறிப்பிட்ட காரியத்தைப்பற்றி அபிப்பிராயம் கேட்டால் இப்படியும் செய்யலாம், அப்படியும் செய்யலாம் என்று சொல்லமாட்டார்கள். இப்படித்தான் செய்ய வேண்டும். என்று அறுதியிட்டுச் சொல்லுவார்கள். இதனை

ஒருமையே மொழியும் நீரார்

என்ற சிறந்த சொற்ருெடரால் சித்திரிக்கின்ருர் கம்பர். இதையே,

ஒருதலையாச் சொல்லலும் வல்லதூ
அமைச்சு

என்று அருளுகின்ருர் வள்ளுவர்.

அமைச்சிலக்கணம் பற்றி இங்கு இறுதியில் விரித்துச் சொன்ன கம்பனின் பாட்டை முழு வடிவத்தில் படித்து மகிழ்வோம்.

தம்முயிர்க்கு உறுதியெண்ணுர்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாது நின்று உரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையும் உணரவல்லார் ஒரு
மொழியும் நீரார். [மையே

## பெற்ருேர்

டி. ராமானுஜ ஐயங்கார்

இராம இராஜ்யத்து மக்கள் குடிவாழ்க்கையில் தாய் தந்தையராகிய பெற்ருேர் குடும்பத்தின் தலைவராய் விளங்கினர். அவர்கள் இல்வாழ்க்கைக்கு அடிப்படை அம்சம் புத்திரவாத்ஸல்யம். தாய்ப் பசு தன் கன்றின் அழுக்கை நாவினுல் நக்கிப் பரிசுத்தம் ஆக்குவதுபோன்ற சிறந்த அன்புடைமை—வாத்ஸல்யம் எனப்படும். இராஜ குடும்பத்தின் தாய்மார் இயல்பின்மேல் வைத்து இவ்வில்லறச் சிறப்பைக் கம்பர் வெகு அழகாக வெளிப்படுத்தியிருக்கிருர்.

இராமன் பிரிவைக் கேட்ட கோசலை "கன்று பிரிந்துழிக் கறவையொப்பக் கரைந்து" கலங்கினுள்; இராம லட்சுமணர்களைக் காட்டிற்கு அனுப்பிய சுமத்திரையின் நிலை "இரண்டு கன்று ஓரீஇ வெருவரும் ஆவினில் தாயும் விம்மினுள்" என்று சொல்லப்படுகின்றது. பின்பும் வனவாசம் கழித்து அவர்களை மீண்டும் வந்து கண்ட இராமன் தாயாருக்கு அன்று சார்ந்த கன்றெனும் தகையன் ஆனுன்.

தந்தையாகிய தசரதன் தன் உயிரிலும், சிறக்க இராமனிடம் அன்பு பூண்டிருந்தான் என்று தெரிகிறது. விசுவாமித்திரர் தன் வேள்வியைக் காக்க இராமனைத் தன்னுேடு அனுப்பும்படி தசரதனை வேண்டியது. உன் உயிரை எனக்குத் தாவென்று இரந்து கேட்கும் எமனுடைய கூற்றுப் போன்றிருந்ததாம். "நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி என உயிரிரக்கும் கொடுங் கூற்றின் உளையச் சொன்னுன்" என்ருர் கம்பர். அம் [illegible] இன்னுயிர் வழிக் கொண்டா" லெனச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

மீண்டும் இராமன் மிதிலையில் வில் முறித்த பிறகு தந்தையை எதிர்கொண்டு வந்து கண்டு வணங்கினுன். அதனைக் கவி "தேவரும் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர் ஆவி வந்தென்ன வந்து அரசன் மாட்டணுகினுன்" என்ருர். இங்ஙனமே பலவிடத்தும் இராமனைத் தசரதனுக்கு உயிராக உவமித்திருப்பது கவனிக்கத்தக்கது. அன்றியும் இராமன் முடிதுறந்து வனம் போக நேர்ந்த பிரிவுக்கு ஆற்ருமல் "நீகானகம் புகுமுன் நான் வானகம் புகுவேன்" என்று சொல்லி தசரதன் உயிர் நீத்தமை இவ்வன்பின் திறத்தை நன்கு விளக்கும்.

இராவண வதத்தின் பிறகு இராமனுக்குத் தசரதன் தெய்வ யாக்கையில் தரிசனம் தந்ததாக ஒரு சந்தர்ப்பம் உண்டு. அப்போது மைந்தன் தந்தையை மலரடியில வீழ்ந்து வணங்கினுன். தந்தையும், அவனை மார்புறத் தழுவி மனம் களித்தான். களித்தவன் மனமுருகிக் கூறிய கூற்று இது:

அன்று கேகயன் மகள் கொண்ட
வரமெனு மயில்வேல்
இன்று காறுமென் இதயத்தினிடை
நின்றது என்னைக்
சொன்னும் நீங்கலது இப்பொழுது
அகன்றது உன் குலப்பூண்
மன்றல் ஆகமாம் காந்தமாமணி
இன்று வாங்க.

இதில் தசரதனுக்கு இருந்த புத்திர வாத்ஸல்யம் எல்லை கடந்து புலனுகின்றது. முன்பு கைகேசிக்கு வரமளித்து இராமனுக்குக்கொடுமை இழைக்க நேர்ந்த வருத்தத்தைத் தசரதன் இதனுல் தீர்த்துக் கொண்டு விடுகிருன்.

இனி இவ்வாறே இராமன் பெற்ருேரிடம் கொண்ட பேரன்பும் அளவிறந்தது. பிதுர் வாக்கிய பரிபாலனம் என்னும் பெரிய தருமத்தை நிலைநிறுத்தவே பிறந்தவன் அவன் என்பது பலரும் அறிந்தது. "தாதை சொல் தலைமேற்கொண்ட தாபதன்; தருமமூர்த்தி, ஈதைகள் தீர்க்கும நாமத்திராமன்" என்பது கம்பர் வாக்கு. கைகேசிக்கு எதிராக இராமனை வனம் போகாமல் தடுத்து "முடி சூட்டியே தீருவது" என்று இலக்குமணன் மிக்க சீற்றம் கொண்டான். அது தணிக்கும் வாயிலாக இராமன் கூறிய வார்த்தைகள் மிக அருமையுடையன. "நதியின் பிழையன்று நறும்புனலின்மை; அற்றே பதியின் பிழையன்று பயந்து நம்மைப் புரந்தாள் மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த விதியின் பிழை. நீ இதற்கு என்னை வெகுண்டதென்ருன்" என்று சொல்லப்படுகிறது. மேலும் அவன் நன்சொற்கள் தந்து எனை நாளும் வளர்த்த தாதை தன் சொற்கடந்து எங்கு அரசாள்வது தக்கது அன்ருல் என்று பெற்ருேரிடம் காட்டவேண்டிய புதலவர் கடமை இன்னதென வற்புறுத்தும்போது தம்பியின் சினம் அடியோடு தணிகிறது. இன்னும் இராமன் தன் தந்தையின் உயிர்த்தோழன் என்பது பற்றி சடாயுவையும் தந்தையாகவே கருதி அப்பறவை வேந்தனுக்கு ஈமக்கடன் இயற்றிய செய்தியும் அவன் பெற்ருேரிடம் கொண்ட பேரன்பிற்குச் சிறந்த சான்ருகும்.

கைகேசியும் இராமனிடம் எவருக்கும் தாழ்ந்த அன்புடையவள் இல்லை. மிகச் சீரிய அன்பு காட்டியே ஒழுகினுள். "தாய் கையில் வளர்ந்திலன் வளர்ந்தது தவத்தால கேகயன் மடந்தை" என்கிருர் கவி. கூனி, "உனக்குப் பேரிடர் வந்துற்றபோது யாதும் கவலையின்றி யுறங்குகிருயே" என்று சொல்லியபோது இராமனைப் பயந்ததற்கு இடருண்டோ என்று மறுமொழி பகர்ந்தாள் என்ருல் அவளது நெஞ்சிலே இருந்த அன்பாழம காண நம்மால் இயலுமா? கைகேசியையும் இராமன் அதற்கு மேலாக நேசித்திருந்தான். இத சீதை அநும

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்துநாதரின் உத்தானத் 'திருப்பள்ளி யெழுச்சி'

ஜி. ஏ. பிள்ளை, அடம்பன்

பொழுது புலர்ந்தது பூதலம் வாழப்
புன்மை யிருளுடன் போனது நாணித்
தொழுதுனை வணங்கிடத் தொண்டர்கள் வந்தே
சூழ்ந்தன ரன்பெனும் சூளினை ஏத்தி
அழுது குழைந்துன தருள்முகங் காண
ஆவியில் ஏங்கி அலமரு கின்ருேம்
விழிதுயில் கின்றவன விமலனின் மதலாய்!
வியப்பிது காண்பள்ளி யெழுந்தரு ளாயே!

இரவியைக் கூவி எழுந்தன வெங்கும்
இருசிறைப் புள்ளிடும் இன்னிசை நாதம்
பரவையின் நீலப் பண்புடை வானம்
பரந்து சிவந்தது பக்தர் மனம்போல்
நிருதரைக் காண நீசரோம் உள்ளம்
நீள நினைந்துமே நின்னடி வந்தோம்
பெருதுயில் கொண்டவன பிறவியின் தலைவா
பேரரு ளா! பள்ளி யெழுந்தரு ளாயே!

கங்குலும் பகலும் கலந்தன வுந்தன்
கவளமுகம் காணுக் களிபெரு வெறியில்
எங்கணு மெழுந்து பொங்கிய தன்பு
ஏழ்கடல் தாவி யெழுந்தது வேட்கை
பங்கயம் நாணும் நின்முகம் காணப்
பாவிகள் ஈண்டு பரிதபிக் கின்ருேம்
இன்துயில் கொண்டவன எம்பெரு மானே!
இன்னுமென் பள்ளி யெழுந்தரு ளாயே!

நன்மை களித்தது நானிலம் மீதே
நலிந்துடன் தீமைகள் நாணி நடந்தன
ஏழ்மை உயர்ந்தது எங்கணு முன்னுல்
ஏங்கிய தந்த காரமிவ் வுலகில்
புன்மை கலந்த பொய்மை அகந்தை
போயின நாணியுன் போதவை கண்டு
கண்வளர் கின்ருய் காசினி வாழக்
கனியமு தேபள்ளி யெழுந்தரு ளாயே!

இம்சை கவிழ்ந்தது இப்புவி நாண
எழுந்த தகிம்சை இளமதி போல
அம்புவி யெங்கும் அருள்மழை பொழிய
அன்பு குழைந்தது ஆன்ம விழிப்பில்
துன்பம்! துன்பம்! என்று துடித்தவர்
துன்பினில் இன்பம் தோன்றவே கண்டார்
அன்புப் பெருக்கில் அளிதுயில் கொண்டவன
ஆண்டவ னே! பள்ளி யெழுந்தரு ளாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம்: விய, சித்திரை கசு


## இன்னுந் தாமதமா?

இலங்கையின் தொழில் விருத்தியைப் பற்றி இடைவிடாது பேச்சுகள் நிகழ்ந்து வருகின்றனவே யன்றி ஏதாவது உண்மையான விருத்தி தொழில் முறையில் ஏற்பட்டுளதாவெனில், இல்லையென்றே கூறவேண்டும். தொழில் விருத்தியைப்பற்றி விசாரணை செய்ய எழுந்த சபைகட்கு எல்லையில்லை. அச்சபைகள் ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கைகட்கும் ஒரு அளவில்லை. டொனமூர்த்திட்டம் அனுசரணையில் வந்த காலந்தொட்டு இத்துறையில் ஏதாவது கணிக்கப்படக்கூடிய நன்மைகள் ஏற்படுமோ வென்று யாவரும் எதிர்பார்த்தனர். பொதுவாக நோக்குமிடத்து வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப்பொருள்கட்கும் புறநாடுகளையே நாம் எதிர்பார்க்க வேண்டியதாகின்றது. இந்நிலை எப்போது நீங்குமோ தெரியவில்லை.

சமீபத்திலும் ஒரு சபையினர் ஓர் விரிந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். அறிக்கையில் கூறப்பட்ட முடிவுகள் அனுசரணையில் வராதிருக்கும் வரையும் அவற்றாற் பயன் யாதென்பதே எமது கேள்வியாகும். இந்த, அடுத்த சில மாதங்கட்குள் பெருந் தொழிற்சாலைகளை நிறுவிவிடுகின்றோம் என்று அரசினர் பரபரப்புக் காட்டுவதும், பின் அந்த ஊக்கம் சிற்சில நாட்களுட் படிப்படியாக மறைந்துவிடுவதும் கண்கூடு. இலங்கையில் ஒரு சீமேந்துத் தொழிற்சாலையை அமைத்துவிட அரசினர் சென்ற பத்து வருடங்களாக முயற்சித்தும் இன்னும் அது செயல்முறையில் வந்தபாடில்லை. காங்கேசன்துறையில் ஒருவருடத்துள் இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமெனக் கூறினர். வருடங்கள் மூன்றாகியும் இன்னும் ஏதாவது நடைமுறையில் வந்ததாவெனில், இல்லையென்றே கூற வேணடும். மேற்படி தொழிற்சாலை காங்கேசன்துறையில் ஏற்படுமா வென்பதைக் குறித்தும் சிலர் சந்தேகிக்கின்றனர்.

இந்தியா முதலிய அயல் நாடுகளில் எத்தனையோ புதிய தொழிற்சாலைகள் யுத்தகாலத்தில் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மோட்டார், ஆகாயக்கப்பல் என்பன செய்யும் தொழிற்சாலைகள் நிலைபெற்று வேலை ஆரம்பித்து விட்டன. முன்னிருந்த இரும்புத் தொழிற்சாலைகளும் சீமேந்துத் தொழிற்சாலைகளும் பன்மடங்கு விருத்தியடைந்தமை யாவரும் அறிந்த விஷயம். யுத்தகாலத்தில் அநேக யுத்த உபகரணங்கள் இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகளில் இயற்றப்படுகின்றன வென்றால், முன்னேற்றம் எத்தன்மைத்தென ஒருபடி விளங்கலாம். இலங்கையிலெல்லாம் சிலுசிலுப்பா யிருக்கின்றதேயன்றி அனுஷ்டானத்தில் விசுவாசத்துடன் செய்துமுடிக்கப்படுவதைக் காணோம். யுத்தகாலத்திலும்இப்போதும்நாட்டின் செல்வம் எவ்வளவுவெளியே இறைக்கப்படுகின்றது.

பணப் புழக்கம் அதிகமாகவுள்ள இச்சமயத்தில் நம்மவர் விஷயங்களை ஊன்றி நோக்காது குதூகலமாக வாழ்க்கையை நடத்துகின்றனர். இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் சென்றபின் இலங்கையின் செல்வாக்குப் பெரிய பரிதாப நிலையை அடையப் போகின்றதென்பதை எவருஞ் சிறிதளவேனும் நோக்குகின்றிலர். வேலையில்லாக் கஷ்டம் பிரமாத நிலையை அடைந்து பணப் புழக்கமும் முற்றாக அருகிப்போகச் செய்வது யாதெனவறியாது மலைக்க வேண்டியதுதான். தொழிற்றுறையில் நம நாடு ஓரளவுக்கு உயர்ச்சியடைந்தாலன்றி இலங்கைக்கு உண்மையான மீட்சி வரப்போகின்றிலது. தேசிய நோக்குடைய உண்மையான தலைவர்கள் ஒரு சிலராவது இன்னுந் தோற்றாமையே இவ்வூழல்கட்கெல்லாம் காரணமாகும். தலைவரென நடிப்போர் சிலரும் சுயநலத்தாற் பெரிதும் உந்தப்பெற்றவ ராகவே காணப்படுகின்றனர். இன்னொரு பெரிய குறை யாதெனில் வகுப்புத் துவேஷத்தை முற்றாகவொழித்த தலைவர்கள் இலங்கையில் இல்லையென்பதே.

வகுப்புத் துவேஷத்தை விருத்திசெய்வதை விட்டுத் தேசிய நோக்குடன் தொழில் விருத்தியே தமது இலக்காகத் தலைவர்கள் கொள்ள வேணடும். புடவை நெசவு செய்யுந் தொழிலை அரசினர் இலங்கையில் விருத்தியடையச் செய்யக் கூடாதா? வேண்டிய பஞ்சினை இலங்கையில் உற்பத்தி செய்வது சடுதியில் இயலாவிடின், இந்தியா முதலியவிடங்களிற் பெறலாமே. பஞ்சு விளைவிக்கப் பெருத ஜப்பான் பிரிட்டன் ஆகிய நாடுகள் புடவை நெசவு செய்வதில் எவ்வளவு உயர் நிலையையடைந்துள்ளன. நாம இத்துறையில் சிறிதாவது ஊக்கங் காட்டி யிருப்பின், இச்சமயம் உடை விஷயமாக இவ்வளவு கஷ்டப்பட வேணடியதில்லையே. நம் நாட்டின் செல்வமும் வேற்று நாடுகட்குப் போக வேண்டியதில்லையே. எனவே, அரசினர் தொழில் விஷயத்தில் அளவுகடந்த ஊக்கங் காட்டியுழைப்பதே அவசியம். என்றும் எல்லா விஷயங்களிலுந் தாமதங் கொள்வதாற் பெருநட்டமே வந்தெய்தும்.

## உணவு நிலை

உலகஉணவுப்பஞ்சம் ஏற்பட்ட இக்காலத்து, இலங்கையின் உணவுநிலை கேவலமாயிருப்பது நூதனமன்று. கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை உலகிலுள்ள எல்லா நாடுகட்கும் வித்தியாசமின்றிப் பகிர்ந்து கொடுக்கச் செய்யும் எத்தனங்களை எவரும் குறைகூறவியலாது. சமீபத்தில் இவ் விஷயமாக வேண்டிய விஷயங்களை ஆலோசிக்க மூன்று பெரிய மகாநாடுகள் மூன்றிடத்திற் கூடின. வாஷிங்றன், லண்டன், சிங்கப்பூர் ஆகிய மூவிடத்திலும் நடத்தப்பெற்ற ஆலோசனைக் கூட்டங்களில் இலங்கைப் பிரதிநிதிகளும் சமுகமளித்து இலங்கைக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பற்றி யெடுத்துரைத்தனர். தென்கீழ் ஆசிய உணவுமகாநாடு சென்றவாரம் சிங்கப்பூரில் நடந்தபோது இலங்கைத் தேசாதிபதியும் கௌரவ செனநாயக்கா அவர்களும் சமுகமளித்தமையை எவரும் அறிவர். இக் கூட்டங்களின் முடிவினை நோக்குமிடத்து, பெரிய நன்மையை இலங்கை உணவுப்பொருள் விஷயத்தில் அடையுமெனக் கூறவியலாது. போதிய உணவுப் பொருள்களைப் பெற்றுச் சேர்த்து வைக்கலாமென்பதும் அசம்பாவிதம். அவ்வப்பொழுது கிடைப்பதைப்பெற்று உண்டு வாழும் நிலைமையையே இலங்கையன்றிமற்றைய நாடுகளும் அடைந்துள்ளன. பர்மா, சீயம், இந்துசீனம் முதலிய விடங்களிற் பலகாரணங்கள் பற்றிப் போதிய அரிசி கிடைப்பதரிதாம் அப்படித்தான் கிடைப்பினும் அவைகளை வேண்டிய வேண்டிய நாடுகட்குக் கொண்டு செல்லக் கப்பல் முதலிய போக்குவரத்து வசதிகளே கிடைப்பது மிக அரிதாய் விட்டது. இந்தியாவிலிருந்து அரிசி நெல் கிடைப்பது முன்னரே நின்றுவிட்டது. இப்பொழுது ஈரவெண்காயம் சரக்குவகை முதலிய பொருள்கள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது தடைபட்டுள்ளதாகும். ஆகவே, கஷ்டங்கள் முன்னரிலும் பன்மடங்கு அதிகரித்து விட்டதென்பாம். கௌரவ செனநாயக்கா அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நோக்குமிடத்து இலங்கை மக்கள் தாமே முயற்சி [illegible] லன்றி எதிர்த்துவரும் [illegible] பஞ்சத்தைச்சமாளிப்பது கஷ்டம்.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

யாழ்ப்பாணத்திற் கடந்த வாரந் தொடக்கம் அநேக வீடுகளில் ஒரே கல்யாணமயமாகவேயிருக்கின்றது! சிங்கப்பூர்க் கப்பல் ஒன்று இலங்கைக்குவந்த காரணத்தைக்கொண்டுதான் இத்தனை குதூகலம். மச்சான், மாமி, குஞ்சி, தாய் பிள்ளைகள் சிநேகிதர்கள் அயலார் அனைவரும் இவ்வைபவங்களிற் பங்கு பற்றுகின்றனர். எத்தனையோவருடங்களாக யாழ்ப்பாண மண்ணிற் கால்வையாதவர்கள் சிங்கப்பூரிற் சண்டைமுடிந்ததும் ஒருமாதிரி இலங்கைக்கு வந்துவிட்டனர். இவர்களை வரவேற்று உபசரிப்பதைப் பார்க்கும்போது கல்யாணவீட்டில் இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படுவது நூதனமல்ல.

### பரம இரகசியம்!

ஐரோப்பிய நாடுகளில் ஆண்களிலும் பார்க்கப் பெண்களே அதிகமானவர்கள். ஆனாற் கீழைத் தேசங்களில் விஷயம் வேறு இங்கெல்லாம் ஆண்களின் தொகைதான் அதிகம். சமீபத்தில் எடுத்த மதிப்பின்படி 1000 பேரில் ஆண்கள் 525. பெண்கள் 475. 1943-ம் ஆண்டில் ஜமேக்காதேசத்தில் மதிப்பெடுப்பு நிகழ்ந்தது. அங்கு 1000-க்கு 937 பேர் ஆண்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்திற் பெண்மூச்சு அதிகமாகவே யிருக்கின்றது. ஆண்களிலும் பார்க்கப் பெண்களே தொகையிற் கூடியவர்கள் என்று ஸ்ரீ ரணசிங்கா தெரிவிக்கின்றார். அதுதான் யாழ்ப்பாணத்து வாலிபர்கள் ஒரு இலட்சம் அரை இலட்சம் என்று சீதனம் பெற்று ஜீவனம் நடத்துகின்றனர்! வாழ்க வனிதைகள்!

### இது என்ன கோளாறு?

யாழ்ப்பாண நகரத்தில் வசிக்கும் மக்கள் போதிய வெளிச்சமில்லாமல் அவஸ்தைப்படுகின்றனர். சறுக்கீஸ் காரருக்கு மின்சார சக்தி இரவல்கொடுப்பதால் நகரம் அந்தகாரத்துள் மூழ்க வேண்டிய வில்லங்கம் ஏற்பட்டுவிட்டதா, என்ன? 12-ந்திகதி மின்சார யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுக்குச் சறுக்கீஸை சாட்டாகக்காட்டி நகரசங்கத்தலைவர் சறுக்கிவீழாது சமாளித்திருக்கின்றார். எஞ்சின் கோளாறோ நகரசங்க அங்கத்தவர்களின் கோளாறோ யார் கண்டது? அப்படியிருந்தும் யாழ்ப்பாணத்திலுள்ள சிலவீடுகள் ஜெகஜோதியாகப் பிரகாசிக்கின்றனவாம்! நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும்மழை என்று படிக்கின்றோம். அதேபோல இந்த மின்சார வெளிச்சமும் வித்தியாசம்பாராட்டாமல் நடந்துகொண்டால் பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெல்லாம் விளிபெற்றுப் பதவி கொள்வர். மக்களின் தேவைகளைக் கவனியாது சினிமாவுஞ் சேர்க்கஸும் என்று சொல்லிச் சிரித்து விளையாடுவது அழகல்ல.

### ஆசிரியர்களே உஷார்!

புதிய சம்பளத்திட்டங்களைப் பார்த்த ஆசிரியர்களுக்கு வயிறு பற்றி எரிகின்றது. எரிகின்ற வயிற்றிலே புளி கரைத்து ஊற்றுவதுபோல இருக்கின்றது பஸ் பரிசோதனைக்காரரின் சம்பள விகிதம். தமிழ் ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து யுத்தம் புரியத் தயாராகின்றனர் என்று கேள்வி. வட இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கமும் இவர்களுக்கு உறுதுணையாக விருக்கின்றது. தொழிலாளர்கள் பயமுறுத்திக் காரியம் பார்க்கும்போது படித்துப் பாஸ் பண்ணிய ஆசிரியர்களா பார்த்துக் [illegible] விட்டு ஆசிரியர்கள் வேலை நிறுத்தஞ் செய்யப் போகின்றார்கள் என்ற கதையும் எட்டுகின்றது. ஆசிரியர்களே உஷார்!

### "கோவிந்தன் நகரம்"

இதென்ன, இருந்தாற்போலிருந்து 'கோவிந்தன் நகரம்' ஒன்று இலங்கையில் முளைகொண்டு விட்டதேயென்று வாசகர்கள் யோசிக்கலாம். இலங்கை இந்திய காங்கிரஸ், ஆறாவது ஆண்டு விழாவை நேற்றும் நேற்று முன்தினமும் இன்றுங் கொண்டாடுகின்றது. நுவரேலியாவில் அமைக்கப்பட்டிருக்கும் கோவிந்தன் நகரிலே தான் இக் கொண்டாட்டம். கோவிந்தன் ஒரு தொழிலாளி. கலகம் ஒன்று ஏற்பட்டபோது துப்பாக்கிக்கு இரையாகினான். அதற்காக இந்தக் கௌரவம்.

### பிறர் போற்றப் பெற்றாள்

உலகமே போற்றி மகிழும் உத்தமி ஒருவரை இந்தியாவுக்கு அளித்த பெண்மணி கோவிந்தன் நகரத்துக் கொண்டாட்டத்திற் பங்கு பற்றுகின்றார். இவர்தான் ஸ்ரீமதி அம்முசுவாமிநாதன். சென்னை சட்டசபை அங்கத்தவர். கப்டன் லட்சுமியின் தாயார். தமிழ்நாட்டு அரசியல், சமூக விஷயங்களிற் சலியாது உழைப்பவர். அம்முசுவாமிநாதன் இங்குள்ள இந்தியர்களை யெல்லாம் இலங்கை மக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழும்படி உபதேசஞ் செய்கின்றார். ஆமாம், இலங்கையைச் சுரண்டாமல், சுதந்தரத்துக்கு முட்டுக்கட்டை போடாமல் இலங்கையைத் தங்குமடமாகக் கருதி ஊர் திரும்புவதே இலங்கைவாழ் இந்தியர்களின் இலக்காக இருக்கவேண்டும்.

### இட்டலி தோசைமீது பாணம்!

சென்னைச் சிற்றுண்டிச் சாலைகளிலும் ஹோட்டல்களிலும் இனி அரிசி உப்புமா, இட்டலி தோசை, பொங்கல் முதலிய உணவுவகைகள் தயாரிக்கக் கூடாதெனப் பங்கீடு உத்தியோகஸ்தர்கள் உத்தரவு செய்திருக்கின்றனர். அப்படியானால் சென்னையில் உள்ளவர்கள் இலங்கைக்கு வந்து கோதுமை மாவாற் செய்யப்படும் றப்பர் தோசையை வயிறாரச் சாப்பிடலாம். அதுபிடியாதுபோனால் நல்ல இடியப்பமும் உருளைக்கிழங்குச் சொதியும் இருக்கின்றன. சமீபத்தில் யாழ்ப்பாணம்வந்த திருச்சி எழுத்தாளர்கள் இடியப்பஞ் சாப்பிட்டு இலக்கியச் சுவையுடன் திரும்பியிருக்கின்றனர்!

### சுதந்திரப் பிரகாசம்

தமிழ்நாடு தனது தலைவரைத் தேடிப்பிடித்துக்கொண்டது. ஆந்திரகேசரி ஸ்ரீபிரகாசம் சென்னை சட்டசபைத் தலைவராக விளங்குகின்றார். ஸ்ரீ பிரகாசம் காருவை வாழ்த்துகின்றோம். ஆந்திரகேசரி என்றால் அப்புறம் அதிகம் பேசவேண்டியதில்லை. சுதந்திரம் உதயமாகுங் காலத்தில் அதன் பிரகாசத்தையும் அனைவரும் அனுபவிக்கலாம். கட்டுண்டோம்; பொறுத்திருந்தோம்; காலம்மாறும். இதோ, காலந்திரிதமாக மாறிக்கொண்டே வருகின்றது!

### பத்திரிகையாளர் மகாநாடு

தமிழ்நாடு பத்திரிகையாளர் சமமேளனத்தின் மகாநாடு கடந்த வாரம் சென்னையில் நிகழ்ந்தது. ஹிந்து பத்திரிகைத் துணை ஆசிரியர் தலைமை வகித்தார். ஹிந்துஸ்தான் ஆசிரியர் ஸ்ரீ ரா. நாராயண ஐயங்கார் வரவேற்புச் சபையின் தலைவராக வீற்றிருந்து பிரதிநிதிகளை வரவேற்றார். பாரததேவி ஸ்ரீ அருணாசலம் அவர்கள் சமமேளனத்தின் செயலாளர் என்பதை நினைவூட்ட வேண்டும்.

## இராம இராச்சியம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னிடம் கூறிய ஒரு வரலாற்றால் விளங்கும். சீதை ஒரு சமயம் "என்னோர் இன்னுயிர்ப் பைங்கிளிக்கு யார் பெயர் ஈகேன், மன்ன"— என்று இராமனை வினவினளாம். அப்போது அவன் 'மாசறு கைகயன் மாது என் அன்னை தன் பெயர் ஆக" என்று மிக்க அன்போடு கூறினனும். இது அந்தப் புரத்தில் ஏகாந்த வேளையில் நிகழ்ந்தது. எவரும் அறியாத ஒரு இரகசியம். அசோக வனத்தில் சீதை இராமனுக்குக் கூறும்படி அநுமனிடம் இதை அடையாளமாகச் சொல்லியனுப்பினாள்.

மற்றோர் சமயம் தேவ சரீரத்தில் தசரதன் தரிசனம் தந்தபோது தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியுமாம் வரம் தருக எனத் தாழ்ந்து வேண்டிக்கொண்டமையாலும் இராமன் கைகேசிக்கு எத்துணை அன்பன் என்பது இனிது விளங்கும். இங்கே "என்தெய்வம்" என்றது, தன் தாயாகிய கைகேசியை, "மாத்ரு தேவோ பவ" என்ற வேத வசனம் கொண்டு நிரூபித்தவாறு' இது நிற்க,

இராவணனும் இந்திரசித்தும் கூடத்தந்தை மைந்தன் என்ற முறையில் ஒருவருக்கொருவர் ஒப்புயர்வற்ற அன்பு பூண்டு ஒழுகினர். இந்திரசித்து மாயப்போர் வன்மையால் இராம சேனை மீது இரண்டு மூன்று முறை வெற்றி பெற்றான். அங்ஙனம், அவன் போருக்கு எழுந்த ஒவ்வொரு சமயத்திலும் தந்தையை வணங்கி விடைகொண்டு சென்றதாகவே சொல்லப்படுகின்றது. இராவணனும் அவனை உவகை மீதூர்ந்த உள்ளன்போடு ஆசிகள் மொழிந்து அனுப்பினான் என்பர்.

இலக்குமணனோடு பொருது புண்பட்ட இந்திரசித்து தன் பள்ளியை அடைந்து வருந்தி இருந்தனன். அப்போது இராவணன் அங்கே வந்தான். அந்த நிலைமையிலும் மிக அரிதாக முயன்று புதல்வன் தந்தையைத் தொழுதான் என்று தெரிகிறது. "எழுந்தடி வணங்கலாற்றான் இருகையும் அரிதின் ஏற்றி தொழும் தொழிலானை நோக்கித் துணுக்குற்றான் இராவணன்" என்கிறார் கவி. அன்றியும் அவன் இறுதியாக இராவணனிடம் கூறிய உறுதி பயக்கும் மொழிகள் அருமை வாய்ந்தன. சீதைபால் ஆசையை நாம் விட்டுவிட வேணடும் அதனால் அவர் சீற்றம் தீர்ந்து நம்மையும் பொறுப்பர். நான் அஞ்சினேன் என்று கருதற்க; உம்மேல் காதலாலே உரைக்கின்றேன்" என்றுபல நியாயங்கள் எடுத்துரைத்தான். ஊழ்வலியால் அதனை ஏற்காத இராவணன் தானே போருக்குச் செல்ல முற்பட்டான். அப்போதும் மைந்தன் தன் கடமையை மறக்கவில்லை. போர்க்களத்தில் தந்தையினும் முற்படத்தான் முடிதலே தக்கதெனத் துணிந்தான். நான் இறந்த பின்பாயினும் நீவிர் நல்வழி கண்டு தெளிமின் என்று தந்தையைத் தேற்றிக் கொடியோன் தன்னைக் கடைக்கண்ணால் நோக்கி இரு கண் நீர் கலுழப்போனான். தன்னைக் காக்கும் பொருட்டுத் தொடர்ந்து வந்த வீரரை நோக்கி "மன்னனைக்காமின் யாதும் கலங்கலிர்" என்று வற்புறுத்தினான். இவற்றால் எல்லாம் அவன் தந்தையிடம் கொண்டிருந்த பேரார்வமும் புதல்வனுக்குரிய கடமையை இயற்றி முடித்த பேராண்மையும் நன்கு விளங்கும்.

இவற்றால் இராமராஜ்யத்தில் பெற்றோர்கட்கும் பிள்ளைக்கும் இடையே நிகழ்ந்த அன்பின் தொடர்பு சுருக்கிக் கூறப்பட்டது. இங்ஙனமே மேலும் ஆராய்ந்து "கம்பர் கவியில்" இன்பம் நுகர்வதற்கு இது ஒரு சிறு தூண்டுகோலாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழமையும் புதுமையும்

## ஸ்ரீ திருலோகசீதாராம் விளக்கம்

இராஜ அரியரத்தினம்

ஈழகேசரி ஆசிரியர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்களின் தலைமையில் ஸ்ரீ திருலோக சீதாராம் நிகழ்த்திய இலக்கியச் சொற்பொழிவு இங்கு இதய ஒலியாக அமைந்திருக்கின்றது.

**தமிழ் இலக்கியத்திலே** ஏற்பட்டிருக்கும் மலர்ச்சி அநேகருக்கு மயக்கத்தைக் கொடுத்து வருகின்றது. புதுமை, மறுமலர்ச்சி என்ற பதங்கள் இப்போது தமிழ் இலக்கியஉலகில் அதிகமாக அடிபடுகின்றன. பழமையில் நம்பிக்கையுள்ளவர்கள் தமிழ் இலக்கியத்தின் புதிய போக்கைக்கண்டு எள்ளி நகையாடுகின்றனர். பழமையின் உயர்ந்தபண்பை அறியாதவர்கள் பழமையை இகழ்கின்றனர். பழமையின் கம்பீரத்தையும் புதுமையின் கனிவையும் உணரமுடியாதகாரணத்தால் இப்படியான இழுபறிகள் ஏற்பட்டு இலக்கிய உலகைக் கலக்கியடிக்கின்றன. இவர்களைப் பார்த்துத்தான் பாரதியார்,

> பழமை பழமை யென்று
> பாவனை பேச லன்றிப்
> பழமை யிருந்தநிலை—கிளியே
> பாமர ரேதறி வார்?

என்று பாடுகின்றார்.

இந்த இலக்கியச் சிக்கலைவெகு இலகுவாக ஸ்ரீ திருலோக சீதாராம் தீர்த்துவைத்ததுமன்றி மறுமலர்ச்சியின் லாவண்யத்தையும் விளக்கினார். இலக்கிய யாத்திரை செய்யும் நோக்கமாகத் தமிழ் நாட்டிலிருந்து ஈழமணித் திருநாட்டுக்கு வந்த ஸ்ரீ திருலோக சீதாராம் "**பழமையும் புதுமையும்**" பற்றி நிகழ்த்திய சொற்பொழிவு அநேகருடைய கண்களைத் திறந்துவைத்ததுடன் பழமையின் மாண்பையும் புதுமையின் தேவையையும் உணர்த்தியது என்றுகூறினால் அதுமிகையாகாது. இவருடன் திருச்சி எழுத்தாளர் ஸ்ரீ. ரா. அவர்களும் வந்திருந்தார். இந்நிலையில், இத்தமிழ் நாட்டு எழுத்தாளரைப்பற்றி அன்பர்கள் தெரிந்துகொள்வது அவசியமல்லவா? கலாமோகினியின் உதவியுடன் எனதுவேலைஇதோ, இலகுவாகிவிடுகின்றது. ஸ்ரீ திருலோக சீதாராம் அவர்களைப்பற்றிக் கலாமோகினி இதழ்ஒன்று பின்வருமாறு கூறுகின்றது;

"மந்தஹாஸத்துடன் விளங்கும் நண்பர் தமிழ்ப் பத்திரிகை உலகத்திலேயே விநோதமான ஒரு ஸ்தானத்திற்கு உரியவர். சிறுகதையோ, நாவலோ, நாடகமோ, கட்டுரையோ ஒன்றும் அதிகமாக எழுதாத இவர் பத்திரிகை வட்டாரங்களிற் பிரசித்தம் என்று கூறப்படும் எல்லையை வெகுவேகமாய்ப்போய்த் தொட்டுவிட்டவர்.

திருலோகம்; மந்தஹாஸன்; சீதாராமன் என்றபெயர்கள் இலக்கிய நண்பர்களிடையே அடைந்துள்ள அவ்வளவு பரிச்சயத்திற்கும் அவருடைய கவி இதயமே மூலகாரணம்."

நல்ல கவிதை எது; நல்ல கருத்து எது என்ற பேதாபேதத்தையும்; கவிதையின் அர்த்தம்; அந்தரார்த்தம் எது என்ற நுணுக்கத்தையும் நன்கறிந்து பாவபூர்வமாகக் கவிதாவிமர்சனம் செய்வதில் இவருக்குள்ள ஆற்றல் ஈடெடுப்பெற்றது.

தமிழ்நாட்டிற் சமீபகாலத்தில் வெளிவந்த நல்ல கவிதைகளின் நயம் ஒவ்வொன்றையும் அவருக்கே பிரத்தியேகமான ஞாபக சக்தியால் ரசிகர்களிடையே பசுமையாகக் காட்டுவது இவருக்குப் பிடித்த விஷயம். தமிழ்க்கவிதைகளையெல்லாம் ஒன்று சேர்த்துக் கவிதைத் தொகுதி வெளியிடுவதற்குத் தகுதியும் திறமையும் வாய்ந்தவர் இவரே.

மந்தஹாஸன் என்ற புனைபெயருடன் தமிழ் இலக்கிய உலகிலும் ரசிகர்களின் உள்ளங்களிலும் சஞ்சாரஞ்செய்யும் சீதாராமன் அநேக அழகிய கவிதைகளைப் புனைந்திருக்கின்றார். "இத்தனை பாடல்களையும் உள்ளத்திற் பதித்துவைத்து 'எஞ்சின்'மாதிரி வெளியிலே கொட்டுகின்றீர்களே; இது எப்படி முடிகின்றது" என நான் அவரைக்கேட்டேன். அப்போது அவர் சொன்னபதில் என்னைத் திணறவைத்தது. "ஜீவனுள்ள எந்தக்கவிதையும் எனது உள்ளத்திற் பதிந்துவிடுகின்றது. இரண்டு மூன்றுதரம் அதைப் படித்தாற்போதும்" என்றார். ஆகவே சப்புச்சவர்களுக்கு இவருடைய உள்ளத்தில் இடமில்லை அல்லவா?

**இனி,** பழமையும் புதுமையும் என்பதுபற்றி ஆராய்வோம். ஸ்ரீ சீதாராம் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டதாம் "பாரதியார் பழையலட்சியப் பாதையினின்று விலகிச் செல்லவில்லை; விலகவும் முயலவில்லை" என்பதை நன்குணர்ந்திருக்கின்றோம்.

தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுமையும், எழிலும், புத்துணர்ச்சியும் உண்டாக்கிய பாரதியை முதல்வராகக்கொண்டு இந்நாள் வளர்ந்துவரும் கவிதைச்செல்வம் தமிழ்மக்களிடையே ஒரு பெரும் கவிதை யார்வத்தை உண்டாக்கி வருகிறது.

சங்க காலத்தில் மெய்மையும், எழிலும், நுணுக்கமும், தனிப் பண்பும் பெற்று உலாப்போந்த கவிதை பின்னாளிற் பொய்யொடு புனைந்துரையணிந்து நிலவுவதாயிற்று. காலச் சுழற்சியும், மக்கள் மனஉணர்வும் இதற்கொரு காரணமாயின என்று வித்துவான் ஒருவர் கூறியிருப்பதை இங்கு குறிப்பிடுவது சிறந்ததெனஎனக்குத்தோன்றுகின்றது.

பழமை பழமை என்று சொல்லிப் பண்டிதர்கள் நந்திபோல் வழி மறித்துக்கிடக்கவுங்கூடாது. பழமையில் ஒன்றுமில்லை. அதை எடுத்துத் தூரத்தில்எறி என்று சொல்லி இருட்டிற்சென்று தத்தளித்துத் தடுமாறுதலுந் தவறு. "செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்வதுவும்வேண்டும், "பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு", "தமிழினை இகழ்ந்தவனைத் தாய்தடுத்தாலும் விடேன்" போன்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய வீரவாக்கியங்கள் எங்களுக்கு வழிகாட்டி அறிவூட்டும்போது நாம் பழமையை எவ்வாறு உதறித்தள்ளிவிடமுடியும்? முன்னைப்பழமைக்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் பெற்றியதாக விருக்குந் தமிழ், காலங்கண்டமொழியாகும்.

**பழமையை** அஸ்திவாரமாகக் கொண்டு அதிற் சமைக்கப்படும் இலக்கியத்திலேதான் தெளிவையும் அமைதியையும் அனுபவிக்கலாம். மறுமலர்ச்சி பேசிக் காமா சோமா என்று எழுதித்தள்ளிவிட்டால் அது இலக்கியமாக மாட்டாது. பழமையின் கம்பீரத்தை ஸ்ரீ திருலோகம் சமீபத்திற் கூறினார். இதனையே 1944-ம்ஆண்டு நவம்பர்மாதம் வெளிவந்த வசந்தம் இதழில் நான் எழுதிய இலக்கியக் கட்டுரையில் அழுத்தமாகக் கூறியிருக்கின்றேன். அதனை இங்குதருவது பொருத்தமானது.

> "மாற்றங்கள் வளர்ச்சிக்கு அறிகுறி என்பதை உலகஇலக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன .:. ... இதனால் பழமை ஓர் உப்புச் சப்பற்ற வஸ்து என்று கருதி அதைத் தூரத்தே எறிந்துவிடுவதல்ல. பழய பண்பாட்டில், அதுவுந் தமிழுக்குச் சொந்தமான பண்பாட்டில் ஊறி, புதுமைபெற்று விளங்கும் இலக்கிய சிருட்டிகள்தான் கால வெள்ளத்தைத் தாண்டி செம்மைநிலைபெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கும். புதிய இலக்கியப் பயிர் சோலையுடன் புதுக் குருத்துக்களை விரிக்கப் பழைய எரு மிகவும் அவசியம்."

ஸ்ரீ திருலோகம் அடுத்ததாக மிகவும் முக்கியமானதோர் அம்சத்தைப்பற்றிப் பேசினார். இக்காலத்திலே பல்கிப் பெருகும் கவிதை வெள்ளத்தைப்பற்றியது தான் அது. எடுத்ததற்கெல்லாங் கவிதைபுனைவது இப்போது எங்கள் நாட்டிலுஞ் சர்வசாதாரணமாகிவிட்டது. பழைய கவிகளைக் கண்டு பயந்தகாலம்போய், இப்போது புதுக்கவிகளைக் கண்டு ஓட்டம் பிடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது! "மறுமலர்ச்சித் தமிழகம் பாரதியார் முதல் எத்தனையோ எழுத்தாளரைத் தந்திருக்கிறது. சுமார் நூறு நல்ல எழுத்தாளர்கள் நம்மிடையேயிருக்கிறார்கள்." எனச் சுவாமி சுத்தானந்தர் முடிவுகட்டியிருக்கின்றார். இது தமிழ்நாட்டைப்பொறுத்த விஷயம். ஆனால் ஸ்ரீ திருலோக சீதாராம் ஈழநாட்டிலும் ஓர் அற்புதக் கவிஞன் இருப்பதை அறிந்திருக்கின்றார். அவருடைய அருமை பெருமைகளையெல்லாம் அவர் பாடிய கவிதைமூலம் எடுத்துரைத்தார். ஆமாம்; நவாலியூர் சோமசுந்தரப் புலவரைத்தான் போற்றினார். புலவர்இயற்றிய கத்தரித் தோட்ட வெருளி அவரை ஒரு தங்க ரத்தினமாக்கி விட்டது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் புத்தகம் புதிய உவமைகளையும் அவற்றின் நயங்களையும் ஸ்ரீ சீதாராம் சுவையுடன் எடுத்துக்காட்டினார். அப்படியே தமிழ்நாட்டின் ஒருசில இளங்கவிகளின் பாடல்களை இசைத்ததுமன்றி தாம்இயற்றிய ஒரு இனிமைக் கவிதையையும் பாடி மகிழ்வித்தார். பாரதிதாசனின் பாடல்களிற் பழமையிலே புது நினைத்பாய்தெழுவதைக் கண்டோம். புற்றீசல்கள்போல வெளிக்கிளம்பும் ஏனைய கவிதைகள் அனைத்தையுங்கண்டு நாம் மயங்கவேண்டியதில்லை. வந்தது மோசம் என்று அலறவேண்டியதுமில்லை. **புதுமைப் பித்தன்** கூறுவதுபோல "இன்று இலக்கியத்தை இங்கிலீஷ் கண்ணாடிகொண்டு சோதனை செய்து, அந்தச் சங்கப் பலகையின் அங்கீகாரம் பெற்றதே கவிதை என நாம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்றால், அதைவிட தமிழ்க் காவியத்துக்கே சந்தனக்கட்டையில் சிதை வைத்து சந்துஷ்டியடையலாம்."

**ஸ்ரீ** திருலோக சீதாராம் அவர்களின் பேச்சுக்கு அணி செய்வதுபோல இரு குறிப்புரைகள் அன்று நிகழ்ந்தன. இருவரும் அமைதியான ஈழத்து எழுத்தாளர்கள். புதுமைக்கும் பழமைக்கும் பாலம் அமைக்குந் தகைமை வாய்ந்தவர்கள். ஒருவர் பண்டிதர் வ. நடராஜா (சக்திதாஸன்) மற்றவர் ஆசிரியர் செந்திநாதன். ஸ்ரீ நடராஜா அவர்கள் பேச்சாளரின் பொருள் நிறைந்த சொற்பெருக்கை வியந்ததுடன் மறுமலர்ச்சியின் கருத்தையும் இலட்சியத்தையும் தெளிவுபடுத்தியதற்கு நன்றி செலுத்தினார். அத்துடன் பழைய கால இலக்கியத்திற் சொல்லப்படும் கதைகளின் உட்கருத்தையும் விளக்கி வைத்தார் என்று நினைக்கின்றேன். ஸ்ரீ செந்தில்நாதன் அவர்கள் தமிழ்நாட்டு எழுத்தாளரைப்பற்றியும், பத்திரிகைகளைப் பற்றியும் தாம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை அச்சமின்றித் தைரியத்துடன் கூறினார். நேர்மையான இலக்கிய விமர்சனத்தின் அவசியத்தையும் வற்புறுத்தினார். ஸ்ரீ திருலோக சீதாரம் கிராம ஊழியன் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த காலத்தில் ஈழநாட்டு எழுத்தாளர்களைக் கௌரவித்ததையும் பாராட்டினார். இவற்றினும் மேலாக ஸ்ரீ சீதாராம் எழுதிய ஒரு காவிய விமர்சனத்தையும் நினைவூட்டிப் பாரதியாரை வேதாந்தச் சிமிளியிலிட்ட வ. ரா. அவர்களுக்கு ஸ்ரீ சீதாராம் தெரிவித்த சிறந்த பதிலையும் நினைவூட்டிப் பேச்சாளருக்கு நன்றி கூறினார்.

---

# மலாயாத் தமிழ்ச் சகோதரர்

## கொழும்பு சேர்ந்த காட்சி

[ ஒரு நிருபர் எழுதுவது ]

**என்ன ஆனந்தம்! என்ன** பெருமிதம்! என்ன குதூகலம் எவ்வளவு உபசாரம்! அப்பப்பா, கொழும்புத் துறைமுகத்தை அன்று யாழ்ப்பாணத்தவர்கள் முற்றுகையிட்டு ஒரே கல்யாணப் பந்தல்போலாக்கி விட்டார்கள்.

திங்கட்கிழமை மத்தியானம் சரியாக 12 மணிக்குக் கப்பல் துறைமுகத்தினுள் வந்து சேர்ந்ததாயினும் பிரயாணிகள் இறங்கி வந்த முதற் படகு பிற்பகல் 3 மணிக்குத்தான் பாலத்தையடைந்தது. அப்பொழுது பார்க்க வேண்டும் அவர்களின் முகங்களையெல்லாம்! தாயைப்பிரிந்திருந்த குழந்தைகள் மீண்டும் வந்தடைந்ததுபோல ஒரே ஆனந்த வெள்ளத்தில் தோய்ந்திருந்தனர். இந்தச் சந்தோஷக் காட்சியின் நடுவே சிற்சில சோகக் காட்சிகளும் தோன்றின. ஜப்பானியர் அட்டூழியத்தின் காரணமாகவும் மற்றும் நோய் பிணி காரணமாகவும் கணவரை யிழந்து திரும்பிய விதவைகளும், குழந்தை குட்டிகளைப் பறிகொடுத்த தாய்மாரும், பெற்றோரை யிழந்த குழந்தைகளும் துறைமுகப் பாலத்திலேயே தங்கள் இனத்தவர் முகங்களைப் பார்த்ததும் வீறிட்டலறினர். இப்பரிதாபமான காட்சிகளும் இருந்தபோதிலும், கொழும்பு மலாயாக் கஷ்டநிவாரண சங்கத்தார் செய்த மகத்தான தொண்டைப் பாராட்டாதவர்கள் இல்லை.

பினாங்கிலும் மற்றும் உள்நாட்டிலிருந்தும் வந்த பலர் சுவெற்றன்ஹாம் துறைமுகத்தில் கப்பலேறினார்கள். 78 மணி நேரத்தில் கப்பல் கொழும்பை வந்து சேர்ந்துவிட்டது. ஆனால் பெரும்பாலான யாவர்களும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளாகையாற் பட்டினியாகத்தான் வந்தார்கள்! 175 வெள்ளி டிக்கட் கட்டணம். 24 மணிநேரத்துக்குப் போதுமான உணவுமாத்திரம் கொண்டுவர வேண்டுமென்று கப்பல் அதிகாரிகள் சொல்லியிருந்தார்கள். ஆனால் கப்பலிற் பச்சரிசியும் வேறு சில சாமான்களும் கொடுத்தார்களல்லாமல் சமைத்த உணவோ, அல்லது சமைப்பதற்குப் பாத்திரம் முதலியவைகளோ கொடுத்துதவவில்லை. ஆகையாற் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததும், கஷ்டநிவாரண சங்கத்தார் பிரத்தியேகமாக ஒழுங்குசெய்துவைத்த விடுதியிற் சந்தோஷமாகச் சிறிதுநேரம் சிரமபரிகாரம் செய்து கொண்டனர்.

அகில இலங்கைத் தமிழர்காங்கிரஸ் ஆரம்பத்தில் இந்த நிவாரணவேலையைத் தொடங்கினர். ஆனால் போதிய பணம் வசூலாகவில்லை. கப்பல்வருவதற்கு ஒரு நாள் முன்னதாக வேறு பல தமிழ் மக்கள் முன்வந்து உதவினார்கள். 17 விதமான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. குழந்தைகளுக்கு இனிப்பு வகையும் பரிமாறப்பட்டன. எல்லாப் பிரயாணிகளுமே இந்த உபசாரத்தை வாயாரப் புகழ்ந்தார்கள். பினாங்கிலே ஸ்ரீ எம். சரவணமுத்து அவர்களின் சலியாத உழைப்பையும் உதவியையும் எல்லாரும் பாராட்டினார்கள். ஆனால் நமது இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு அங்கே போயிருப்பவர்கள் திரும்பியும் பார்க்கவில்லை!

ஸ்ரீ ராஜசிங்கம் எவ்விதத்திலும் உதவி செய்யவில்லையென்றும் செய்ய வேண்டிய கடமையைத் தானும் செய்யவில்லையென்றும், ஒரே முகமாக யாவரும் குறைகூறினார்கள். ஸ்ரீ ராஜசிங்கத்தை ஏன் தான் அங்கே அனுப்பினீர்கள் என்று தாறுமாறாகப் பேசினார்கள்.

திங்கட்கிழமை ஒருபகுதியார் கப்பலிலிருந்திறங்கி அன்று மாலையே யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணமாகிவிட்டார்கள். மறுநாள் செவ்வாய்க்கிழமையும் மற்றவர்கள் இறங்கி விசேஷ ரயிலில் பிரயாணமானார்கள். ரயில்வேக்காரரும் பிரத்தியேக வசதிகள் செய்து கொடுத்தனர்.

---

# நமது வாசிகசாலை

## வார வெளியீடுகள்

**லோகோபகாரி :—** வாரப் பதிப்பு. ஆசிரியர்: ஆ. கு. பூங்காவனம் விலாசம்: 17. A. Godown Street, ஜோர்ஜ் டவுன் சென்னை. விலை: அ. 2.

விய ஆண்டுப் பிறப்புடன் பழமையும் புதுமையும் பொருந்திய தமிழ் வாரப் பத்திரிகையாகிய லோகோபகாரி மீண்டும் தோன்றியிருக்கின்றது. ஸ்ரீ நெல்லையப்பரைத் தனது ஆசிரியராகக்கொண்ட லோகோபகாரி சென்ற ஐம்பதாண்டுகளாகத் தமிழ்நாட்டிற்கு சிறந்த முறையிற் சேவை செய்துள்ளது. ஸ்ரீ பூங்காவனம் அவர்களின் தலைமையில் இப்பத்திரிகை தொடர்ந்து நடைபெறுகின்றது. புதிய முதல் இதழிலே தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் திகழ்கின்றன.

**தமிழ் உலகம் :—** வாரவெளியீடு ஆசிரியர்: V. S. வெங்கட்டராமன். விலாசம்: 113, Big Street, திருவல்லிக்கேணி சென்னை. விலை: அ 4.

இத்தேசிய வாரவெளியீடு நல்ல முறையில் வெளிவருகின்றது. சிறந்த எழுத்தாளர்கள் கட்டுரைகளுங் கவிதைகளும் எழுதுகின்றனர். சிறுகதையும் ஒரு முக்கிய அம்சம். வ. ரா போன்ற பிரபல ஆசிரியர்களின் ஆதரவும் இப் பத்திரிகைக்கு இருக்கின்றது. புத்தாண்டு இதழை அழகுறச் செய்யும் அத்தனை எழுத்தாளர்களையும் தமிழ் உலகம் நன்கு அறியும்.

**நவயுகம்**—தேசிய வாரப்பத்திரிகை. காரியாலயம் 80 A ரொபின்சன் வீதி சிங்கப்பூர். ஆண்டுச்சந்தா வெள்ளி 14. தனிப்பிரதி விலை: 25 காசு. சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் இப்புதிய பத்திரிகையிற் படிக்கக்கூடிய விஷயங்கள் இருக்கின்றன. சகல வசதிகளும் ஏற்பட்டபின் பத்திரிகை இன்னுஞ் சிறப்புறுமென நம்பலாம்.

**தாய்நாடு:** மாதப்பத்திரிகை ஆசிரியர்: க. நாராயணன். விலாசம்: தாய்நாடு காரியாலயம், புதுக்கோட்டை. விலை: இலங்கையில் சதம் 15. கட்டுரைகள், கதைகள், கவிதைகள் நிறைந்த இம் மாசிகை சிறப்புறுவதற்கு இன்னும் இடம் இருக்கின்றது.

**இலங்காதேவி**—மாதவெளியீடு ஆசிரியர்கள்: பொ. நடராசா, மா. சபாபதி; விலாசம்: 76. வன்ரோயன் தெரு கொழும்பு. தனிப்பிரதி விலை: சதம் 20 வருட சந்தா: ரூ. 2—50.

கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுவர் கதைகள் மற்றும் பல விஷயங்களைக்கொண்டு இப் பத்திரிகை வெளிவருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகமே இப்படித்தான்!

அன்பர் ஒருவர். இருபத்தொருவயதுச் சுந்தர புருஷன் ஆண்சகோதரர் ஆறுபேருடனும் பெண் சகோதரி ஒருத்தியுடனும் பூமியில் ஜனனமானூர். அவர்கள் பெரிய பெரிய B. A, B. Sc எல்லாம் பாஸ்பண்ணி சேட்பிக்கேற்றுகளுக்குக் கூடக் கண்ணுடி போட்டுச் சுவரில் மாட்டியிருக்கிறூர்கள். தன லட்சுமி இப்போது அவர்கள் வீட்டிலேயே வாசம். ஆனுல் அன்பர் தன்கையே தனக்குதவி என்று அடுக்களையுட்புகுந்து சட்டிபானைகளுடன் சண்டை போடுகிறூராம். இரண்டுநாள்களாகத் தேகத்திற் கொஞ்சம் அலுப்பு. தமிழ் வைத்தியர் ஒருவரிடம் சென்றூர். தேடுவதற்கு எவை சிரமமோ அவைறைத்தான் அநுபானமாகச் சொல்லி மருந்தையும் கொடுத்தார். அத்துடன் உழுந்துக் கழியும் சாப்பிடவேண்டும் என்றும் வற்புறுத்தினூராம். வைத்தியருக்கு ஆயிரங்கோடி நமஸ்காரத்தையும் மலிவாகத் தட்டிவிட்டு வெளியில் வந்து ஆண்டவனை நினைத்துத் தாராளமாக ஒருபெருமூச்சுவிட்டார். உழுந்துக்கழி சாப்பிடச் சொன்னூரே உழுந்துதான் பிளாக்மாக்கெட்டில் வாங்கிவிடலாம். ஆனுல் கழியைக் கிண்டுவதற்கு ஒருஆளையும் பிளாக்மாக்கெட்டில் வாங்கலாமோ என்றெல்லாம் கேட்டார். ஏனப்பா ஒரு கலியாணம் பண்ணிக்கொண்டாற் கரைச்சல் தீர்ந்திடுமே என்றேன். தான்போக வழியைக்காணவில்லை. அதற்குக் கலியாணம் இல்லாததுதான் குறை என்றூர். "ஒரு சமையற்காரனைப் பிடித்துயுத்த அலவன்சும் தாராலாமென்று கேட்டுப்பார்" என்றேன். "அந்தக்காலந்தானே மலையேறிவிட்டது. 'மிலிற்றரி மிலிற்றரி' என்று காணம்போட்டுக்கொண்டு பறந்தார்கள். மிலிற்றரி ஓய்ந்தும் ஓய்ந்த ஒரு மனுஷனைக் கூடக் கண்ணுற்காணமுடியவில்லையே" என்கிறூர் அன்பர்.

அன்பர் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது. எத்தனையோ வயது இள நங்கையர்கள் அடுக்களைப் பக்கத்தையேஎறெடுத்தும்பாராது "போட்டிக்கோ" வைப் பார்த்த வண்ணம் இருக்கிறூர்கள். எங்களுடைய பிள்ளைக்குச் சமைக்கத் தெரியாது என்று பூசி மெழுகிப் பெற்றேர்கள் சமாதானம் சொல்லிவிடுகிறூர்கள். அடுக்களை வேலையைப் பிள்ளை செய்துகொண்டிருந்தால் பிள்ளையின் படிப்புக் கெட்டுவிடும். காந்தள்மலர் முகிழ்போற் சிவந்த மெல்லிய விரல்களும், அன்றலர்ந்த செந்தாமரை முகமும் என்னகதியாகிவிடும். பின் கலியாணச் சந்தையில் மிடுக்கில்லாச் சரக்காகிவிடும். என்றெல்லாம் அடுத்த வீட்டு மனுஷியுடன் தேனெழுகப்பேசிவிட்டுக் கதிரையில் இருந்து கலகலக்கும் பிள்ளைக்குத் தேநீரை எத்தனை பெற்றேர்கள் மேசையில் வைக்கிறூர்கள். ஒரு லட்சம் சீதனத்துடன் பெண் வருகிறூள் என்றவுடன் மாப்பிள்ளை கலியாணவீட்டுக்குக் கடன்பட்டோ அல்லது சீதனப்பணத்திலோ

**செ. தனபாலசிங்கன்**

ஒரு பதினயிரத்தைக் கலியாண வீட்டுக்குச் செலவுசெய்து விடுகிறூர். கடைசியில் சீமாட்டி உப்பிலேயே கறி வைத்துவிடுகிறூளே என்று முணு முணுத்துக்கொண்டு அவளுக்குமட்டும்சொல்லாது ஹொட்டலுக்குச் சாப்பாட்டுக்கு ஓடர்பண்ணுகிறூர். உலகமே இப்படித்தானப்பா என்று சம்பிரதாயமாக மறுமொழி சொல்லி அன்பருக்கு ஒரு பிரியாவிடையை அவர் ஏற்றுக்கொள்ளாமலே அளித்து அவரை வெளியேற்றினேன்.

அன்பரை அனுப்பிப் பதினைந்து நிமிஷங்கள்தான் இருக்கும். யமலோகத்திலிருந்து தப்பி ஓடிவந்தவர்போல் இன்னெரு அன்பர் ஓடிவந்தார். "என்ன சமாச்சாரம் ஏதும் சுகமில்லையோ" என்றேன். "சுகமில்லை அல்ல" என்று அன்பர் கூறியதிலிருந்து உலகத்தில் இருப்பதிலேயே சுகமில்லை என்று அன்பர் தெட்டத்தெளிவாகக் காட்டினூர். பிதாமாதாக்களிற் பெரியதொரு பழிமூட்டையைச் சுமத்துகிறூர். "துள்ளித் திரிகின்றவயதிலே என் அடுக்கடக்கி ஆங்கிலப் பள்ளிக்கு வைத்திலரே" என்றெல்லாம் எடுத்துப் பேஷாக ஒரு விருத்தம் பாடினூர். இங்கிலீசில் Yes no தெரிந்திட்டால் கஞ்சிக்காவது வழிபண்ணிவிடலாம். ஆனுல் தமிழ் S. S. C ஒன்றுக்கும் வழிவிடுவதாகத் தெரியவில்லையே. ஆசிரியகலாசாலை என்றுல் கல்லில் நார் உரித்தவன் பாடுதான். தோட்டப்பாடசாலைகள் என்றுல் பாழும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அத்தனைபேரும் அங்குதான் குடித்தனம். சரணடைவதற்கு இடமில்லை. மடங்கள், மதகுகள், சங்கக்கடைகள் தானும் இவர்கள் உறைவிடம். அரசாட்சியாரும் இதை அறிந்தோ அறியாமலோ ஆசிரிய தராதரப் பத்திரப்பரீட்சையை வைப்பதற்கு மடவாசிகள், மதகுத் தொண்டர்கள், சங்கக்கடை அன்பர்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேம். ஆசிரிய தராதரப்பத்திரம் சங்கக் கடைகளில் நிலைத்து நிற்கவும், மடங்களில் கும்பகர்ணப்படலத்தை உல்லாசமாக வாசிக்கவும், மதகுகளில் இறுக்கமான தலைப்பாகைகளுடன் காட்சியளிக்கவும் தான் உதவி புரியுமோ என்றெல்லாம் அன்பர் பெரிய பிரசங்கம் ஒன்று நடத்துவார் போலிருந்தது.


உண்மைதான். தமிழ் தமிழ் என்று கர்ச்சனைபோட்டு அது வளருங்காலம் வருங்காலம் என்றெல்லாம் வெட்டிமுழக்கினூர்களே. தமிழ் J. S. C, S. S. C இருந்த பள்ளிக்கூடங்கள் சிலவற்றில் அவ் வகுப்புக்களே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இப்படி எல்லாம் இருக்கும்போது 5-ம் வகுப்புக்குள் படிப்பிப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை என்ற கருத்தினுற் போலும் அரசாட்சியார் ஷெ பரீட்சையை நடத்துகிறூர்கள். சர்வம் மர்மாக இருக்கிற உலகமே இப்படித்தான். உலகம் தவிடுபொடி வேகத்தில் ஓடுகின்றது. நாங்கள் அதன்பின்னுல் ஓடவேண்டும் என்று சாதுரியமாகப்பேசி, அந்த அன்பரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டேன்.

இருந்தும், இந்த அன்பர்களுக்கெல்லாம் மனவேதனை அதிகம். அன்பர்களே! கேளுங்கள், உலகம் மாறுகின்றபொழுது நீங்களும் மாறிக்கொள்ளுங்கள். துன்பத்தை மன உறுதியால் துடையுங்கள். ஏதோ ஒரு துறையிலாவது முன்னணியில் நிற்க முயற்சி செய்யுங்கள். அத்துறையில் நின்று உலகமுய்ய உத்தமசேவை செய்யுங்கள். பெற்றநாட்டுக்காக உழையுங்கள். நான் பிறந்து உலகத்துக்குச் செய்தது என்ன எனத் தனிமையிற் சிந்தியுங்கள். காந்தி, நேரு, சுபாஷ் முதலாம் உத்தம தியாகிகளைப் போன்று பொது மக்கள் நடுவில் நின்று தொண்டுபுரியுங்கள். வாழ்க்கையில் வெற்றியடைய வீறுகொண்டு எழுங்கள். வாட்டத்தை வளர்ச்சிக்கென நம்புங்கள். தோல்வியோ வெற்றியோ எது ஏற்பட்டாலும் பாதகமில்லை. தைரியத்தை இழக்காதீர்கள்.

இவை அன்பர்களுக்கெல்லாம் பிடிக்காவிட்டால் உங்களைப்படைத்த பிரமதேவனை நினைத்துக் கன்னத்திற் போட்டுக்கொள்ளுங்கள்.

## வாலாஜாபாத் இந்து மத பாடசாலை

**1946**, ஏப்ரல் 21-ம் தேதி மேற்படி பாடசாலை மாணவரில்லம் ஆகியவைகளின் 30-ம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது- திருவாங்கூர் திவான் பகதூர் திரு சர். சி. பி. இராமசாமிஐயர் கே. சி. எஸ், கே. சி. ஐ. இ. அவர்கள் திருமகனூர் சி. ஆர். பட்டாபிராமன் பார் அட்லா அவர்கள் தலைமை ஏற்றூர்கள். உயர் திரு. ஐங். டி. இராஜா அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினூர்கள். தலைவர்கள். மாணவர் இல்லத்தையும், தொழிற்சாலையையும் பார்வையிட்டனர். விரதச்சாரி விளையாட்டுகளையும், வலிமைக் காட்சிகளையும் கண்டனர். பிறகு விழா தொடங்கியது. பரிசு வழங்கியவர் இப்பள்ளியில் ஒவ்வொன்றும் தமக்கு மகிழ்ச்சி அளித்ததென்றும், இது மேன்மேல் வளரவேண்டும் என்றும், இங்கு எல்லா வகுப்பு மாணவர்க்கும் ஒற்றுமையாய் இருந்து பழகுவது உயர்ந்தது என்றும் கூறினூர்கள். தலைவரவர்கள் பாடசாலையும், மாணவர் இல்லமும், நன்கு அமைந்துள்ளதையும், மாணவர்கள் மகிழ்வுடன் விளங்குவதையும் ... இங்கு உருவாகிறதையும் பாராட்டி மகிழ்ந்தனர்.—கடிதம்



இவ்விரு குழந்தைகளுக்கும் அதன் சிறந்த குணம் தெரியும்

வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர் குழந்தைகளைப் பாதுகாக்கிறது




WOODWARD'S GRIPE WATER
keeps baby well

I-WW-09-111 TAM W. WOODWARD LTD. LONDON, ENGLAND


விஞ்ஞானத்தின் பரப்பு

# காந்தம்

**கே. எஸ். கிருஷ்ணன்**

காந்தம் மிகவும் சூக்குமமானதும் முக்கியமானதுமான சக்தி. அயக்காந்தக்கல் (Magnetite) இரும்பை இழுக்கக் கூடியது என்பது பல நூற்றுண்டுகளாகத் தெரிந்துள்ள விஷயம். அயக்காந்தத்தின் இயல்பு 'மெக்நிஸ்யா' என்ற இடத்தில் முதல் முதலில் அறியப்பட்டதாதலால், காந்த சக்திக்கு 'மேக்நிட்டிஸ்ம்' என்று மேல்நாட்டவர் பெயரிட்டிருக்கின்றனர்.

கி. பி. பதினொம் நூற்றுண்டிலே காந்தக்கல்லின் மற்றெரு முக்கியமான பண்பு தெரியவந்தது. காந்தக்கல்லின் மத்தியில் கயிற்றைக்கட்டி, அக்காந்தத்தைத் தொங்கவிட்டால், அது தெற்கு வடக்காக நிற்குமென அறியப்பட்டது. அப்பண்புதான் திசை காட்டுங் கருவியில் (Mariner's-compass) உபயோகப்படுகின்றது.

### ஜில்பர்ட்டின் ஆராய்ச்சி

கி. பி. பதினும் நூற்றுண்டில் காந்தத்தைப் பற்றின ஆராய்ச்சி விஞ்ஞானமுறையில் ஆரம்பிக்கப்பட்டது. உவில்லியம் ஜில்பார்ட் (1540—1603) என்ற ஆங்கில வைத்தியர் காந்த சக்தியின் முக்கியமான பண்புகளை வெளியிட்டார். அவையாவன: (1.) காந்தசக்தி, காந்தக்கல்லின் இரு நுனிகளிலுந்தான் திரண்டிருக்கின்றது. (2) காந்தக்கல்லிலுள்ள காந்தசக்தியை வேறெரு இரும்புத்துண்டு அல்லது சலாகைக்கு ஏற்றலாம். (3.) காந்த ஊசியைத் தொங்கவிட்டால், அது தெற்கு வடக்காய் நிற்பதற்குக் காரணம் பூமியின் காந்தசக்தி. (4.) பூமி உருண்டையின் துருவங்களுக்குப்பக்கத்தில் பூமியின் காந்தசக்தி திரண்டிருத்தல் வேண்டும் என்று ஊகித்தறிந்தார். (5.) ஓர் இரும்புச் சலாகையைத் தரைமேல் தெற்கு வடக்காக வைத்துச் சம்மட்டியால் அடித்தால், அச்சலாகை காந்தசக்தியைப் பெறுகிறது என்று காட்டினூர். (6.) காந்தத்தின் வடக்கு நோக்கும் முனைக்கு வடமுனை யென்றும், மற்ற முனைக்குத் தென்முனை யென்றும் பெயரிட்டார். (7.) இரண்டு காந்த ஊசிகளைப் பக்கத்தில் தொங்கவிட்டோமாயின், வடமுனையும் வடமுனையும் ஒன்றுக்கொன்று நெருங்காமல் விலகுமென்பதையும், வடமுனைக்குந் தென்முனைக்கும் கவர்ச்சியேற்படு மென்பதையும் காண்பித்தார். அதாவது, ஒவ்வாமுனைகளிடையில் கவர்ச்சியும், (Attraction between unlike-ploes) ஒருவகைப்பட்ட முனைகளிடையில் வெறுப்பும் (Repulsion between like poles) ஏற்படும் என்பதைக் காட்டினூர். (8.) காந்தசக்திக்கும் மின்சக்திக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டென்று அனுமானித்தார். அவ்வனுமானம் 19 – ம் நூற்றுண்டில் பாரடே (Faraday), ஓர்ஸ்டட் (Oersted) முதலிய விஞ்ஞானிகளால் உண்மையென நிரூபிக்கப்பட்டது.

### காந்த உலோகங்கள்

இயற்கையிலேயே காந்தசக்தியைப் பெற்றுள்ள அயக்காந்தக்கல் அதிக உபயோகமுள்ளதல்ல. செயற்கை முறையாலும் மின்சார முறையாலும் காந்தம் ஊட்டப்பட்ட இரும்பு, உருக்கு இவையாலான சட்டக்காந்தமும் (Bar magnet) வளைவுக்காந்தமும் (Horse-shoe magnet) மிகவும் உபயோகமுள்ளவையாயிருக்கின்றன. எல்லா உலோகங்களிலும் காந்தம் ஏறுது. இரும்பும், நிகலமும் (Nickel) கோபலமும் (Cobalt) காந்தம் ஏறக்கூடியவை. அவற்றுள்ளும் இரும்புதான் சிறந்தது. இரும்பில் பல வகையுண்டு. அவை, வார்ப்பிரும்பு (Cast Iron) தேனிரும்பு (Pig Iron), பணியிரும்பு (Wrought Iron), உருக்கு அல்லது எஃகு (Steel) என்பன. உருக்கில் ஏறிய காந்தம் நிலைத்திருக்கும். உருக்கினுல் நிலைக்காந்தம் (Permanent magnet) செய்யப்படுகின்றது. மற்றவகை இரும்புகளில் காந்தசக்தி மிக எளிதாக ஏறும். மிக விரைவாகவும் வெளியேறிவிடும். அவைகளில் காந்தசக்தி நிலைத்திருக்காது. அவைகளால்தான் நிலையாக் காந்தம் (Temporary-magnet) செய்யப்படுகின்றது. கோபலமும் உருக்கும் சேர்ந்த உலோகச்சேர்மானத்தில்(Alloy) ஏறியகாந்தம் மிகவும் நிலைத்திருக்கின்றது.

### மின் காந்தம்

இரும்பில் காந்த சக்தியை யேற்றுவதற்குப் பல வழிகள் உண்டு. அவைகளுள், மின்சார முறையால் இரும்பில் காந்த மேற்றுதல் மிகவும் முக்கியமானது. உருக்குச்சட்டமொன்றை வரிச்சுற்றில் (Solenoid) வைத்து மின்சாரத்தைச் செலுத்தினுல் உருக்கு நிலைக்காந்தமாக மாறுகிறது. அதேபோல், வரிச்சுற்றில் தேனிரும்பையாவது, பணியிரும்பையாவது வைத்து மின்சாரத்தைப் பாய்ச்சினுல், அது நிலையாக்காந்தம் ஆகிறது. அதாவது மின்சாரம் வரிச்சுற்றில் பாயும் வரையில் இரும்பில் காந்தம் இருக்கிறது. மின்சாரம் செல்லவில்லையாயின் காந்த சக்தியும் இரும்பைவிட்டுச் சென்றுவிடுகிறது. மேலும், மின்னேட்டத்தின் வலிமை கூடினுலும், வரிச்சுற்றினது வளையங்கள் (Turns of wire) அதிகரித்தாலும், இரும்பில் ஏறும் காந்தசக்தி அதிகரிக்கின்றது. ஆனுல் இரும்பில் காந்தம் ஏறுவதற்கு ஓர் அளவு அல்லது எல்லை (Limit of magnetisation) உண்டு.

### காந்தத்தின் உபயோகம்

மின்காந்தம் பல விதங்களில் உபயோகப்படுகின்றது. தொலைப்பேசி (Telephone), தந்தி, டைனமோ, மோட்டோர், மின்சார மணி (Electric bell) முதலியவைகளில் மின்காந்தம் (Electro magnet) உபயோகமாகின்றது. பெரிய இரும்புப் பாரங்களை ஏற்றவும் இறக்கவும் மின்காந்தத்தினுலான தூக்குப்பொறி (Crane) பெரும் உதவியாக இருக்கின்றது. இரும்புப்பொடி வேறு பொருள்களுடன் கலந்திருந்தால், காந்தத்தினுல் இரும்புத்தூளைப் பிரித்து எடுக்கலாம். கெடிகாரம் பழுது பார்க்கிறவன் காந்தம்ஏற்றப்பட்ட இடுக்கியை உபயோகித்து நுண்ணிய திருகு முதலியவைகளை அவைகளின் இடங்களில் மிக எளிதாக வைக்கிறுன். தற்செயலாக, கண்ணிலோ அல்லது சரீரத்தின் வேறெந்தப் பாகத்திலோ இரும்புக் கூறுகள் பாய்ந்து விட்டதாயின், அவைகளையெடுக்க மின்காந்தம் உபயோகப்படுகின்றது. திசை காட்டுங்கருவி செய்யும் உதவியோ ஒப்பற்றது. இவ்வாறுகக் காந்தம் நாகரிக உலகத்திற்குப் பல்வேறு உதவிகளைச் செய்கிறது.

## பாரதியார் கண்ட கனவு

**ஸ்ரீ திருலோகம் சொற்பொழிவு**

"சிவாஜி" ஸ்ரீ திருலோக சீதாராம் அவர்கள் கடந்த புதன் கிழமை மாலை பருத்தித்துறையிலுள்ள சிவப்பிரகாச வித்தியாசாலையில் "பாரதியார் கண்ட கனவு" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினூர்கள்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஆசைச் சட்டம்பியார்

— பவன் —

செல்லத்துரைச் சட்டம்பியார் அந்த வீட்டை விட்டுப் போய் வாரமும் ஒன்று கழிந்து விட்டது. அவரிருந்த அறையிலே இப்போது அவரை ஞாபகப்படுத்துதற்குக் கிடந்தது ஆகக்கூடி அவருடைய மூக்குத்தூள் டப்பியொன்றுதான். அதையுங் கொண்டு சண்டையிட்ட வண்ணம் வீட்டினுள்ளே நுழைந்தனர் பிள்ளைகள் "கும்" "ருணி" என்னுமிருவரும். ஐந்து வயதுவரைக்கும் குழந்தைகளின் வளர்ப்பு முழுதும் ஆயாமாரின் பொறுப்பிலிருந்தபடியால், அந்தப் பருவத்து (இன்பங்களையோ) தொந்தரவுகளையோ அனுபவிக்கத் தாய் "விஸ்ஸா" வுக்கு— (பெற்றோரிட்ட பெயர் விசாலாக்ஷி)— வசதி வாய்க்கவில்லை. இப்பொழுதும் அவர்களைப் பார்ப்பதும் மேய்ப்பதும் பணிப்பெண்களுடைய வேலையேயானாலும், பிள்ளைகளுக்குப் படிக்கிற வயது வந்துவிட்டபடியாலும், சுதேச பாஷைகளுக்கு மதிப்பு ஏறத்தொடங்கிக்கொண்டபடியாலும், வீட்டிலேயே இதற்கென ஒரு சட்டம்பியாரையும் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமொன்று சில பணக்கார வீடுகளிலே ஏற்பட்டுக்கொண்டது. சட்டம்பியாரில்லாத வேளைகளிலே பிள்ளைகளை வீட்டில் வைத்துச் சமாளிப்பதென்றால் விஸ்ஸாவுக்கு ஒரே தலையிடிதான். ஆனால் அதே பிள்ளைகளைச் சட்டம்பியார் சற்றே உரத்த குரலிலே உறுக்கி அதட்டினாலே போதும்; உடனே விஸ்ஸாவுக்குக் கண்ணீர் ஆறாய்ப்பெருக ஆரம்பித்துவிடும். குழந்தைகள் பண்ணும் அமளியைப் பொறுக்க முடியாத விஸ்ஸா வெளி விறாந்தையிலே பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த தன் புருஷனருகே சென்று புதுச் சட்டம்பியார் எப்போ வருகிறார்? ஒருவரையும் இன்னும் ஒழுங்கு பண்ணவில்லையோ? என்று (பெருந்தொகைப் பணம் செலவிட்டு அரிதிற்படித்து ஓரளவிலே வீட்டுப்பாஷையாக்கிய) இங்கிலீஷிலே கேட்டாள்.

உடனே "போய்" (பையா) என்று இராட்சதத் தொனியிலே சத்தமிட்டார் மிஸ்டர் நாக்லின்கன் (நாகலிங்கம்). 'Coming Sir' (இதோவந்திட்டேன்) என்று ஆங்கிலத்திற் சொல்லிக் கொண்டே அவர் முன்னிலையில் வந்து ஒடுங்கி நின்றான் ஒரு "ருமன்".

"இன்றைத் தபால் இன்னும் வரக்காணோம். தபாற்காரர் வேலை நிறுத்தம் செய்யத் திடீரென்று தொடங்கினாலும் தொடங்கியிருக்கலாம். எதற்கும் நீ தபாற்கந்தோருக்குப் போய் தபால் பார்த்துவா" என்று கட்டளையிட்டார் லின்கன்.

"அப்படியே செய்கிறேன்" என்று பணிவுடன் சொல்லிவிட்டுப்போன ருமன் கால்மணித்தியாலத்திற்குள்ளாக நாலைந்து காகிதங்களுடன் வந்து சேர்ந்தான். லின்கன் காகிதங்களை வாங்கி உடைத்து வாசித்த பின்பு, மனைவியை அழைத்து, "மிஸ்டர் ஆறுமுகம் என்றொருவரை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்களாம். வருகிற திங்கட்கிழமை கட்டாயம் வந்து சேருவாராம்" என்றார்.

விஸ்ஸா, "வருகிறவர்கள் ஏதாவது கல்யாணமென்றும் அதென்றும் இதென்றும் சாக்குப்போக்குச்சொல்லி அடிக்கடி இவ்விடத்தைவிட்டுப் போய்விடுகிறார்களே. இவர் எப்படிப்பட்டவரோ தெரியவில்லை" என்றிழுத்தாள்.

லின்கன், "குறைந்தது இரண்டு வருஷமாவது நின்றுபிடிக்க வேணுமென்று சொல்லியிருக்காம். எதற்கும் ஆள்வந்து சேரட்டும். நாங்களும் கறுக்காய்ப் பேசிக்கொள்ளுவோம்."

விஸ்ஸா: "எப்படியும் பிள்ளைகள் சந்தோஷமாயிருக்கவேணும். சட்டம்பிமாரென்றாற் செல்லத்துரைச் சட்டம்பியாரைப் போல் வந்து வாய்க்கவேணும். எந்தநேரமும் பிள்ளைகளை அவருடைய மடியிலேதானே காணலாம். தன் பேருக்கேற்றபடி அவர் செல்லமாய் நடத்தினபடியாலல்லவோ பிள்ளைகள் எங்களை எள்ளளவும் நினைக்காமல் நாள் முழுதும் அவரோடேயே பொழுது போக்கி வந்தார்கள்."

லின்கன்: "எதுவும் கணக்கு வழக்காய் அளவாயிருக்கவேணும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. நீ அளவுக்குமிஞ்சிக் காட்டுகிற செல்லத்தினாலே தானே பிள்ளைகள் உருப்படுகிறார்களில்லை. இத்தனை சட்டம்பிமார் வைத்துப் பார்த்தும் ஒரு மண்ணாவது இன்னும் மூளையிலேறவில்லையே."

விஸ்ஸா: "என்னவோ — இப்போதே சொல்லி வைக்கிறேன். எந்தக் கவணரானாலும்சரி, என் பிள்ளைகளின் மேலே மாத்திரம் கைவைக்க விடமாட்டேன். படிப்பிக்கிறதானால் அடிக்காமற் படிப்பிக்கட்டும். அவருக்கென்ன! சம்பளந்தானே தேவை."

லின்கன்: "அதெல்லாம் அவர் வரட்டும். பேசிக்கொள்வோம்."

மேலே ஒவ்வொருவரும் தத்தம் கருமத்தின்மேற் செல்லலாயினர்.

* * * *

திங்கட்கிழமையும் வந்தது. ஆறுமுகச் சட்டம்பியாரும் வந்து சேர்ந்தார். வந்தவரை உபசரித்து, அவருக்கு வேண்டுவன செய்து, நிபந்தனைகளையும் பேசி முடித்து, அவரை அவருக்குரிய விடுதியறையிற் சேர்த்தார்கள்.

"காட்டுப்பூனை போன்ற அவரது கடுகடுத்த முகத்தைப் பார்க்க எனக்கே பயமாயிருக்கிற பொழுது, பிள்ளைகளுக்கு எப்படித்தான் படிப்பு ஏறப்போகுதோ தெரியாது" என்று சற்றே ஏக்கங்கொண்டாள் விஸ்ஸா.

"படிப்பைப் பற்றி உனக்கே இவ்வளவு கவலை ஏற்படுகிறது நல்ல சகுனந்தான். அந்தக்கவலையை இப்போதைக்குச் சட்டம்பியாருடன் விட்டால் நல்லது. நாங்கள் கண்மூடினால் இந்தப் பிள்ளைகளுக்கு நடக்கிறதைப் பற்றி ஏதாவது அறியப்போகிறோமோ? படிக்கிற வேளையிலாவது அவர்களுடைய செல்லத்தை நினைக்காமற் கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டிரு, அவர்கள் உருப்படுவார்கள். அது கிடக்க, சட்டம்பியார் இன்றைக்குத்தானே வந்திருக்கிறார். அவருடைய தோற்றத்தைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்காதே. பலாப்பழம் போல உள்ளே தித்திப்பும் வெளியே முள்ளுமாயிருக்கினும் இருக்கலாம்" என்று சமாதானம் பண்ணினார் லின்கன்.

பிள்ளைகளும் கொலைக்களத்துக்குச் செல்வார்போல வெகு அச்சமுடையராய்ப் படிப்பறைக்குப் போகலாயினர்.

"வரலாம். வரலாம். வந்து உட்காரலாம்" என்று அதிகார தோரணையிலே சொல்லி எதிரிலிருந்த கதிரைகளைச் சுட்டிக் காட்டினார், வீட்டுக்குக் காகிதமெழுதிக் கொண்டிருந்த சட்டம்பியார்.

காலிற் சப்பாத்து கிறீச் கிறீச் என்று சப்தமிட உள்ளே மெதுவாக நுழைந்தனர் பிள்ளைகளிருவரும். உள்ளங்காலிலிருந்து உச்சிவரையும் அவர்களை ஏறிட்டுப்பார்த்துச் செருமிக்கொண்டு பின்வருமாறு உறுமினார் சட்டம்பியார்.

"கிட்டவாருங்கள். உங்கள் காலுக்குச் சப்பாத்து இப்போ அவசியம் தேவைதானோ? ஆண்டவன் தந்தகாலை ஏன் இப்படித் தோலினாலே மூடி வரிந்து இறுக்கிக் கட்டிப் பலவீனப்படுத்தி அலங்கோல மாக்குகிறீர்கள்? கழற்றி எறியுங்கள். சுத்தமான காற்றுக் கொஞ்சமாவது காலிலும் படட்டும். ஒருவேளை காலிலே அழுக்குப் பிடிக்கும் என்றெண்ணமோ? இது ஆருடைய வீடு? உங்களுடைய வீடுதானே! உங்களுடைய வீட்டை ஆர் சுத்தமாய் வைத்திருக்க வேண்டாமென்றது? கழற்றுங்கள் சப்பாத்தை. இந்த அறையினுள்ளே நீங்கள் வெறுங்காலுடனேதான் புழங்கவேண்டும்."

இதைக்கேட்டதே பிள்ளைகள் ஏதோ இடிவிழுந்தது போலத் திகிலடைந்து, ஒன்றும் செய்ய முடியாதவர்களாய்ச் சிறிதுநேரம் மிரள விழித்துக்கொண்டு நின்றுவிட்டுப் பின்பு ஒருவாறு சப்பாத்தைக் கழற்றிச் சுவரோரமாக வைத்து விட்டுத் தங்கள் ஆசனத்தில் உட்காரலாயினர்.

உட்கார்ந்தபின்பு, தாம் அறியவேண்டிய விஷயங்களைப் பிள்ளைகளிடம் விசாரிக்கலானார் சட்டம்பியார்.

"தம்பி! உன் பேரென்ன?"

(மெதுவான குரலிலே) "கும்."

சட்டம்பியார் "என்ன?" என்று காதிற் கையைச்சேர்த்துச் சற்றே குனிந்து உறுமினார்.

"கும்" என்ற மறுமொழியே மீண்டும் வந்தது.

"அதென்ன 'கும்' என்றால்? முழுப்பெயரையுஞ் சொல்லு."

"குமாரசுவாமி"

"தெய்வமே! ஆண்டவனை நினைவூட்டும் அருமந்த பேரை இப்படியா கொலைபண்ண வேண்டும்? நான் கூப்பிடும் பொழுது முழுப்பெயரையுந்தான் சொல்லிக் கூப்பிடுவேன். கதிர்காமத்தையனை, நல்லூர்க்கந்தனை, செந்தூர்த்தேவனை நினைப்பூட்டி எங்கள் பிறவிப்பிணியைத் தீர்க்கிற திருநாமத்தைக் கொலைபண்ணுதே."—

"பிள்ளை! உன் பேரென்ன?"

"ருணி."

"என்ன ராணி?"

"கமல ராணி."

"நல்லது. அந்த லக்ஷ்மீகரமான பெயர் முழுதும் என்காதிலே விழவேணும்."

"சரி.— எங்கே— உங்கள் புத்தகங்களைப் பார்ப்போம். எடுங்கள்."

"புத்தகங்கள் சட்டம்பியார்தான் வைத்தெடுத்துத் தருகிறவர். எங்களிடமில்லை."

"படிக்கிறது யார்? நீங்களா? சட்டம்பியாரா? இந்த நிமிஷம் கொண்டுவந்து காட்டவேணும் புத்தகங்களை— உம் ம்!"

"உந்த மேசையின் லாச்சியினுள்ளேதான் வைத்தவர் பழைய சட்டம்பியார்."

"இப்புறம் வந்தெடுங்கள் கெதியாய்."

வாயில் விரல் சூப்பிய வண்ணம் மேசையருகே மெதுவாகப்போனார்கள்.

"வாயில்விரலை எடுங்கள். பசித்தால் வீட்டுக்குப்போய் ஏதாவது சாப்பிட்டுவாருங்கள். முதலிலே கையைக் கழுவி வாருங்கள்."

பெருமூச்செறிந்து கொண்டு அடுத்த அறையொன்றிற்போய்க் கை கழுவினபின்பு, திரும்பி வந்து மேசை லாச்சியினுள்ளிருந்த தங்கள் புத்தகங்களையெடுத்து அம் மேசையின் மீது வைத்தார்கள்.

"ஏன் இந்தப் புத்தகமெல்லாம் இவ்வளவு அழுக்கேறி உருவங்கெட்டுக் கிழிந்து போயிருக்கு? ஒவ்வொரு புத்தகமும் உறையிட்டுச் சுத்தமாய் வைத்திருக்க வேணும். இப்பொழுதே எனக்கு முன்னாலிருந்து சீர்ப்படுத்துங்கள் பார்ப்போம்."

அவர்கள் புத்தகங்களைச் சீர்ப்படுத்திக்கொண்டிருக்கும் பொழுது, அவர்கள்மீது கவலைகொண்டு வீட்டிலொரு கருமமும் பார்க்க முடியாதவளாய் தவித்துக்கொண்டிருந்த விஸ்ஸா அவர்களைப் பார்க்கும் பொருட்டு அங்கே சென்று அடிமேல் அடிவைத்து மெதுவாக அவர்களருகே போய்க்கொண்டு "சட்டம்பியார்! இன்றைக்கெப்படி? எல்லாம் ஒழுங்காய் நடை பெறுகிறது தானே?" என்று கேட்டாள்.

"பிள்ளைகள் படிக்குமிடத்திலே பிற அலுவல்களுக் கிடமில்லை படிப்பறையினுள்ளே திறந்த வீட்டினுள் நாய் புகுவதுபோல் ஒருவரும் வரவேண்டாம்," என்ற பதில் காதில் விழுந்ததே அவளுக்குத் தலை இறுகிறுக்கத் தொடங்கிவிட்டது. அவர் தன் பிள்ளைகளுக்குக் கட்டளையிடும் பொழுது அவர்கள் ஆடாமலும் அசையாமலும் சித்திரப்பாவை போலிருந்து கேட்டுப் பணிகளை நிறைவேற்றுதலையும், அவருடைய தொனி ஏதோ எளியார் வீட்டுப்பிள்ளைகளை ஏவுதல்போலிருத்தலையும் அவள் கண்டாள். சப்பாத்துக்கள் சுவரோரமிருப்பதையும் பிள்ளைகள் வெறுங் காலோடு [illegible]டாள். வந்த ஆத்திரம் துக்கம் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு தலைகுனிந்த வண்ணம் வந்தவழியே திரும்பி விட்டாள் விஸ்ஸா.

அன்றெல்லாம் தான் கண்ட காட்சியைவிட்டுப் புருஷனிடம் பிணங்கினாள். ஆனால் அவரோ, "சிவபூசையிலே கரடி விட்டாட்டுவதுபோல நீயேன் பிள்ளைகளுடைய படிப்பு வேளையில் அங்கே போனாய்? படிப்பறையை என்னத்திற்காக வீட்டினின்றும் இவ்வளவு தூரம் தள்ளிக் கட்டி வைத்திருக்கிறோம்? சட்டம்பியார் தனக்கு ஏதாவது வேணுமென்றால் அவர் தானாகவே எங்களுக்குத் தெரிவிப்பார். வரமுந்தியே அவரைக் கலைக்கமுயலாதே. அவர் கண்டிப்பானவரென்று கேள்விப்பட்டபடியினாலல்லவா அப்படியானவரையும் ஒரு முறைபார்ப்போம் என்று நான் உடன்படலானேன். எதற்கும் அவசரப்படாதே. இனிமேல் ஆகவேண்டியதைச் செவ்வனே செய்துகொள்" என்று சற்றே கண்டிப்பாகத்தான் மறுமொழி சொன்னார். இதுவும் என் தலைவிதிதான் என்றெண்ணி மௌனஞ் சாதிக்கலானாள் விஸ்ஸா.

அடுத்தது காட்டும் பளிங்கு போலப் படிப்பறையிலிருந்து வந்த பிள்ளைகளின் முகம் அன்றைய அனுபவத்தின் கசப்பைத் தெளிவாகக் காட்டியதை விஸ்ஸாவன்றி லின்கனும் அவதானித்திருந்தபோதிலும் வெளியே பிள்ளைகளுக்கு உற்சாக வார்த்தைகளையே சொல்லிக் கசப்பைப் போக்க முயன்றார் அந்த லின்கன். முதலாம் நாள் இப்படிக் கழிந்தது.

* * *

காலச் சக்கரம் விரைந்து சென்றது. பிள்ளைகளுடைய நடையுடைபாவனை வாழ்க்கை என்னுமிவையெல்லாவற்றிலும் அநேக மாறுதல்கள் உண்டாகிக் கொண்டன. குறித்த குறித்த நேரங்களிலே அவ்வக்காரியங்களைச் செய்யத் தலைப்பட்டுக் கொண்டனர். தாங்களே தங்கள் பல்லைத் துலக்கலாயினர். தங்கள் உடைகளைத் தாங்களே களைந்து தோய்த்துலர்த்தி உடுக்கத் தொடங்கிக் கொண்டனர். தங்களைப் பொறுத்த வரையிலே ஆயாமாருடைய சேவையையும் வேலைக்காரருடைய சேவையையும் கூடியவரையிலே நீக்கி நடக்க முயல்வாராயினர், சமயாசார சீலங்களைக் கைக்கொள்ளலாயினர். தும்பி, வண்ணாத்திப்பூச்சி முதலானவைகளைப் பிடிப்பதுமில்லை, அவைகளுடைய சிறகையொடித்து வருத்துவதுமில்லை. பேச்சிலும் கீழோராயினும் தாழவுரை என்னும் மூதுரைக்கு ஓர் இலக்கியமாய் அமையலாயினர்.

இவைக்கெல்லாம் காரணம் யாது?

"அணுக்கள் சேர்ந்தே அண்டமானது. அணுக்களின் குணமே அண்டத்தின் குணமாகப் பரிணமிக்கிறது. ஆனபடியால் அணுவை நல்லணுவாக்கினால் அண்டம் நல்லண்டமாகும். பிள்ளைகளே! நீங்களொவ்வொருவரும் நல்லவர்களாயிருந்தால் உலகம் முழுவதுமே நல்லதாயிருக்கும். பணச்செருக்கு ஆகாது. முடிமன்னரும் பிச்சையெடுக்கலாயினர். பணத் திமிரினாலே தொழிலிலே வேறுபாடு கற்பித்துப் பிறரைத் தாழ்த்திக் கெடவேண்டாம். சாதித் திமிர் ஆகாது. பிறரெல்லாம் தங்கள் சாதிக்கே அடிமைகளாம் என்று இறுமாந்துக் கொண்டெழுந்த ஹிற்லரின் வீழ்ச்சியை நீங்களே காணவில்லையா? இப்பொழுது அவருடைய நாடே உலகத்திற்கு அடிமையாகிவிட்டது. நிறத்திமிர் ஆகாது. நிறத்திமிருக்கும் அதோகதிதான். நிறத்திமிர் கொள்ளுகின்ற வீடு ஒவ்வொன்றும் தென்னாபிரிக்காவாகிக் கொந்தளிக்கத் திமிர்கொண்டோரது நீதியெனப் படுவதெல்லாம் பிறருக்கு வாத்தியார் தனக்கு வாத்தியாரல்ல என்னும் பழிமொழிக்கிடமாகிவிடும். வசையுறும் மானமுடையார் போலப் போலிவாழ்வே வாழ நேரிடும். பிறரைப் பழித்தலாகாது, அவர்களுடைய நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள். உண்மை விளங்கும். தெய்வமொன்றுண்டு. தேவகட்டளைகளை மீற வேண்டாம். மீறுவோரே பெரியோராவர்........" என்றிப்படியான போதனைகளை இடித் திடித்துரைத்தபின்பே சட்டம்பியார் தினசரிப் பாடங்களை, ஆரம்பிப்பது வழக்கமாகி விட்டது. கற்ற போதனைகளைச் சாதிக்கவும் பயிற்றி வந்தார். ஆதலினாலே பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேற்பட்ட கசப்பு நாளடைவிலே அறவே தொலைந்து விட்டது.

* * *

பிள்ளைகளுடைய வாயிலிருந்து "அவர் மிகவும் நல்லவர்" என்பதைத் தவிர வேறெவ்விதமான அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்த முடியாமற்போன விஸ்ஸா இரண்டாம் வருடமுடிவிலே தனது பிடிவாதத்தினாலும் தலையணைமந்திர வலிமையினாலும் ஒருவாறு ஆறுமுகச் சட்டம்பியாரை நீக்குவித்து வேறொருவரை அமர்ப்பித்துக் கொண்டாள். பிள்ளைகளோ மடியில் வைத்துச் செல்லம் பண்ணின செல்லத்துரைச் சட்டம்பியாரை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீராயினும் விடாதவர்கள் ஆறுமுகச் சட்டம்பியார் பிரிவை ஆற்றாது கண்ணீர் பெருக்கிக் கொண்டு இப்போது மேல்வந்த புதுச்சட்டம்பியாரிடம் படித்துக் கொண்டிருக்கின்றனர்.

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்திரிரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62
(2711)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday April, 28, 1946 | No. 38

## நற் சுகத்திற்கு




**எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.**

[2713]

### யுத்த அட்டூழியங்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி

தரிடம் துவேஷம் பாராட்டி இப்படியெல்லாம் செய்வது நலமல்ல. யார் பிரதம மந்திரியாக வரலாம், பிரகாசம் காருவா, பட்டாபியா, கிரியா என்றெல்லாம் ஊகம் செய்ய வேண்டிய தேவையில்லை. யாராவது ஒருவர் வந்து தான் தீருவார்கள். 93-வது பிரிவு ஆட்சியை விட நல்ல ஆட்சி வரப் போகிறதென்பது மட்டும் நிச்சயம்.

* * *

சுதந்திரம் கொடுக்க வந்திருப்பவர்கள் சுதந்திரத்தை எடுத்துக் கொண்டுபோய் விட்டால் என்ன செய்வது என்று கேட்கலாம். கட்டாயம் புரட்சி ஏற்படும். அது எந்த உருவெடுக்கும், பலன்கள் எப்படியிருக்கும் என்பதைக் காலந்தான் தீர்மானிக்க முடியும்.

சுதந்திரம் அடைந்த பின்னர் மக்களது பொது நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி எல்லோரும் சுகமாக வாழ வழிகள் செய்யப்படும். இதற்காகத் தலைவர்கள் பல திட்டங்களை வகுத்து வைத்திருக்கிறார்கள்.

எப்படியாவது என்றாவது நாங்கள் சுதந்திரம் அடையத்தான் போகிறோம். மண்ணாக இருந்த நம்மை இவ்வளவு பெரிய மக்களாக்கிய நமது மகாத்மாவுக்கும், காடுகடந்து சென்று போர்புரிந்த நேத்தாஜி போஸ் அவர்களுக்கும் நமது வந்தனங்களைத் தெரிவிப்போமாக!

வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலை ஆண்டு விழாவின் போது திருச்சி அன்பர் ஸ்ரீ ரா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.

### சுண்டிக்குளி — தென்மராட்சி தமிழாசிரியர்

விடுமுறைக் காலக் கழகம்

**இம்மாதம் 9-ந் திகதி** தொடக்கம் 12-ந் திகதி முடிய மேற்படி தமிழாசிரியர் விடுமுறைக் காலக் கழகம் சாவகச்சேரியில் ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களுக்கெனக் கலாசம்பந்தமான சொற்பொழிவுகளும், பகிரங்கக் கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. வட்டார வித்தியாதரிசி ஸ்ரீ M. இராசசுந்தரம் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இவ் விடுமுறைக் காலக் கழகத்தில் மிகுந்த ஊக்கமெடுத்துள்ளார். தென்மராட்சித் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் ஸ்ரீ S. R. கந்தசாமி நல்ல முயற்சி செய்து விடுமுறைக் கழகத்தை வெற்றிகரமாக்கினார். யாழ்ப்பாணத்து அறிஞர் பலர் இதிற் பங்குபற்றிச் சிறந்த பிரசங்கங்கள் நிகழ்த்தினர். இதிற் பங்குபற்றிய ஆசிரியர்கள் அநேகருக்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## இலவச வாசிகசாலை ஆண்டுவிழா

### திருச்சி எழுத்தாளர் விஜயம்

**வல்வெட்டித்துறை** இலவச வாசிகசாலையின் மூன்றாவது ஆண்டு விழாவின் முதல் நாள் வைபவம் வெகு அழகாக நிகழ்ந்தது. திருவாங்கூர்ப் பிரதம நீதியரசர் திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயர் அன்று "அனுபூதி" என்னும் விஷயம் பற்றிப் பக்திநிறைந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்.

**பருத்தித்துறைப் பகுதி**யைச் சேர்ந்த பல கிராமங்களிலிருந்தும் அநேகர் திரண்டுவந்திருந்தனர். திருப்புகழ்மணியவர்கள் பயபக்தியுடன் நிகழ்த்திய சொற்பொழிவு மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

**இரண்டாம் நாள் வைபவம்** செவ்வாய்க்கிழமை (23-4-46) பிற்பகல் நிகழ்ந்தது. "சிவாஜி" ஆசிரியர் திருலோக சீதாராம் **பொழுது போக்கு** என்னும் **விஷயம்** பற்றி அருமையான இலக்கியச் சொற்பொழிவை நிகழ்த்தினார். ஸ்ரீ ரா. அவர்கள் இந்திய அரசியல் பற்றிப் பேசினார்.

ஸ்ரீ திருலோக சீதாராம் அவர்களின் பேச்சு இலக்கியச் சுவையுடன் ததும்பியது. ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்திருந்தன. வாழ்வின் பொழுதை அமர நிலையிற் போக்குவதே பொழுது போக்கு எனக் கூறிச் சிந்தனை செய்யவேண்டிய பல உண்மைகளைக் கூறினார். அவர் பேசுவதைக் கேளுங்கள் :

''பொழுது போக்கு என்பது என்ன? பொழுதின் போக்கா? பொழுதைப் போக்குவதா? இரண்டுந்தான். அதாவது வாழப் பிறந்த மனிதன், கணமும் நில்லாது போய்க்கொண்டிருக்கும் தன் வாழ்வின் பொழுதை அமர நிலையில் போக்குவதே போக்கு.

"அமரநிலை என்று சொல்லும் போது அது அழியாத நிலை என்பது விளங்கும். அந்த நிலைதான் அறிவின் பெருநிலை. இன்பத்தின் எல்லை. இதனைக் கடவுள் என்பார் சிலர். மோக்ஷம் என்பாரும் உண்டு. யாவும் அறிந்த, எல்லாம் வல்ல, நிலையடையவே மனித இயல்பு துடிக்கிறது. அந்தத் துடிப்பு முன்னேறிச் செல்வதே—செல்லும் நேரமே வாழ்வு."

வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலையின் மூன்றாவது ஆண்டு விழா இம்மாதம் 23-ம் 24-ந் திகதிகளிற் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற் பங்குபற்றிச் சொற்பொழிவுகளாற்றும் பொருட்டு தமிழ் நாட்டிலிருந்து இரு தமிழ் அன்பர்கள் வரவழைக்கப்பட்டனர். ஒருவர் திருச்சியிலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகையாகிய சிவாஜியின் ஆசிரியர். இவர்தான் ஸ்ரீ. திருலோக சீதாராம். மற்றவர் "ஸ்ரீ. ரா" என்ற ஸ்ரீநிவாச ராகவன். இலக்கிய சம்பந்தமாக ஸ்ரீ திருலோக சீதாராமும் அரசியல் சம்பந்தமாக ஸ்ரீராவும் பேசினார்கள். நாட்டு மக்களை நல்வழிப் படுத்துவதற்கு வாசிகசாலைகளுந் தொண்டுபுரிகின்றன. இப்பணியில் ஈடுபட்டு உழைக்கும் வல்வெட்டித்துறை வாலிபர்கள் யாழ்ப்பாணத்துக்கு முன்மாதிரியாக விருக்கின்றனர். இலவச வாசிகசாலை ஒன்றை ஏற்படுத்தி அருமையான பத்திரிகைகளையும் நல்ல நூல்களையும் உதவி மக்களின் அறிவை வளர்த்து வருகின்றனர். இந்த ஸ்தாபனம் சதா வளர்ச்சியுற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ திருலோகம் அவர்களின் சொற்பொழிவு நீண்டதாகவிருந்தபோதிலும் சபையோர்களுக்கு அலுப்புத்தட்டவில்லை.

ஸ்ரீ இராஜ அரியரத்தினம் தலைமை வகித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய தமிழ்நாட்டு எழுத்தாளர் இருவரையும் சபையோருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆசிரியர் ஸ்ரீ ஏரம்பமூர்த்தி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## பழமையும் புதுமையும்

### 'மந்தஹாசன்' சொற்பொழிவு

**த**மிழ்நாட்டு எழுத்தாளரும் **சிவாஜி** ஆசிரியருமான ஸ்ரீ திருலோக சீதாராம் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கருகாமையிலுள்ள மயிலிட்டி தெற்கில் பழமையும் புதுமையும் என்ற விஷயம் பற்றி இலக்கியச் சொற்பொழிவு ஒன்றினைக்கடந்த புதன்கிழமை மாலை நிகழ்த்தினார். ஈழகேசரி ஆசிரியர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டம் ஆசிரியர் அவர்களின் தோட்டத்தில் நிகழ்ந்தது. இலக்கிய நண்பர்களும் தமிழ்அறிஞர்களும் நிறைந்திருந்தனர். சொற்பொழிவு முடிந்ததும் பண்டிதர் வ. நடராஜா அவர்கள்குறிப்புரைநிகழ்த்தினார். ஸ்ரீ கனக.செந்திநாதன் நன்றி கூறினார். இதன்பின்னர் ஈழகேசரி ஆசிரியர் அவர்கள் திருச்சியிலிருந்து வந்த இரு எழுத்தாளருக்கும் விருந்தளித்தனர். அன்பர்கள் பலர் இதிற் கலந்துகொண்டனர். திருச்சி அன்பர்கள் இருவரும் வியாழனன்று கொழும்புக்குப் பிரயாணமாயினர்.

## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி

## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியில் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையில் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ருபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ருபாவுக்குக் கூடியும் 10,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ருபாவுக்குக் கூடியும் 50,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ருபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, [illegible] கொழும்பு, என்ற
[illegible]

(2705)

### தமிழ் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை வகுப்பு 1946

6.5-46 தொடக்கம் கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையில் ஆரம்பமாகிறது. விபரமறிய விரும்புவோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதுக.

கிழவாவன
கோப்பாய்

இ. குமாரசாமி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1549

கொக்குவில்
இளையதம்பி சிவப்பிரகாசம்
வழக்காளி.

உரும்பிராய்
1. குட்டித்தம்பி அருளம்பலம்
இருபாலை
2. முருகேசர் கைம்பெண்
வள்ளியம்மைப்பிள்ளை
எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 1549-ம் இலக்கப் பிரிவிடுதல் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1946-ம் ஆண்டு வைகாசி மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று முதல் பங்காளர்களுக்குள்ளும் அவர்கள் வாங்காவிடில் பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும்.

### காணி விபரம்

செ. யோ. சபாபதி உலாந்தாவால் 1945-ம் ஆண்டு தை மாதம் 13-ந் திகதியைக்கொண்ட 832-ம் இலக்கப் படத்தில் இரண்டாம் துண்டாக விபரித்தகாணி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கு உரும்பிராயிறை உடையானுச்சி பிறிவு நிலப்பரப்பு 4. குளி 9. வீடுகளும் கிணறும். எல்லை: கிழக்கு, தாமோதரம்பிள்ளை மகன் தங்கம்மாவும் மறுபேரும். வடக்கு, 832-ம் இலக்கப்படத்தில் முதலாம் துண்டாக விபரிக்கப்பட்டிருக்கும் முருகேசர் கைம்பெண் வள்ளியம்மைப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியகாணி. மேற்கு, கந்தையா கைம்பெண் சின்னத்தங்கத்துக்கும் பங்காளருக்கும் முருகேசு கந்தையாவுக்கு முரிய ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இது அடங்கலும் இதைச் சேர்ந்தவைகளைத்தும்.

மல்லாகம்
24-4-46. C. J. Sabapathy
உலாந்தா.
[2733]

## தமிழ்நாட்டுத் தலைவர்

### ஸ்ரீ பிரகாசம் வெற்றி

**ஸ்ரீ**. டி. பிரகாசம் சென்னைக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீ பிரகாசம் அவர்களுக்கு 82 வாக்குகளும் ஸ்ரீமுத்துரங்க முதலியார் அவர்களுக்கு 69 வாக்குகளும் கிடைத்தன. 175 அங்கத்தினர் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

தேர்தல் முடிந்ததும் சகல அங்கத்தினரும் ஸ்ரீ பிரகாசத்தைப் பாராட்டினர். இம்மாதம் 29-ந் திகதி மந்திரிகள் பெயர்களை ஸ்ரீபிரகாசம் தேசாதிபதியிடங் கொடுப்பார். அநேகமாக இம்மாதம் 30-ந் திகதி மந்திரிகள் விசுவாசப்பிரமாணஞ்செய்து பதவியேற்பார்கள். தேசாதிபதி ஸ்ரீ பிரகாசத்தை தமது மாளிகைக்கு அழைத்துப் பேசினார்.

### மருத்துவ அதிகாரி திரு. A. K. கந்தையா

அரசாங்க மருத்துவ அதிகாரியாக (Apothecary) 30 வருடங்கள் சேவை புரிந்து, கடைசியாக பட்டிருப்பு அரசினர் மருத்துவ சாலையிற் கடமையாற்றிய திரு. A. K. கந்தையா அவர்கள் உபகாரச் சம்பளம் பெற்று தமது ஜென்ன ஊராகிய அளவெட்டியில் இப்பொழுது வதிகின்றார்.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

### 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்
ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை :
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன் :
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்

(2704)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஏப்ரில் 28உ ஞாயிற்றுக்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org